MUNICIPAL COUNCIL JAFFNA

வெளிநாட்டுப் பிரயாணம்
திறமையான சேவைக்கும், நம்பிக்கைக்கும், செலவைக் குறைக்கவும்
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
Tele: 24791, 24886

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

ரெலிபோன் ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை
பாதுகாப்பான இடம்
Safe vehicle parking
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
Tele. 24791, 24886

மலர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு வைகாசி மீ 27 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 0 (10-06-1986) UTHAYAN- A RIVERY TAMIL DAILY கதிர்: 174

# கிளிநொச்சிக்கு மேலும் துருப்புகள்

## ஊரடங்கு நேரத்தில் கொண்டு வரப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கிளிநொச்சியில் உள்ள கூட்டு ஆயுதப்படை முகாமுக்கு மேலும் துருப்புக்கள் வந்து சேர்ந்துள்ளன. வவுனியாவுக்கு அப்பால் இருந்து அவர்கள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொண்டு வந்து இறக்கப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் ஒன்பது மணி நேர பகல் ஊரடங்கு போடப்பட்டது.

அதனைப் பயன்படுத்தி மேலும் துருப்புக்கள் கிளிநொச்சி ஆயுதப்படை முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதனிடையில் கிளிநொச்சியில் போராளிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே நேரடி மோதல் இடம்பெற்றதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி அறிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளையில் நேற்றுக் கிளிநொச்சியில் குறிப்பிடத்தக்க அளவுக்கு அசம்பாவிதம் எதுவும் நடக்கவில்லை என்றும் —

ஐந்து நாட்களின் பின்னர் நேற்றுச் சண்டை தணிந்ததாகவும்— அறிய வந்தது.

சண்டை தணிந்ததைப் பயன்படுத்தி தருமபுரம், கனகபுரம், உருத்திரபுரம், ஜெயந்திநகர், முரசுமோட்டை மற்றும் பல பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமானோர் உடுத்த உடுப்புகளோடு மட்டும் யாழ்ப்பாணம் வரத் தொடங்கியுள்ளனர்!

வாகனப் போக்குவரத்தும் காட்டுப் பிரதேசங்கள் ஊடாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாம் மின்சாரமும் துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஆனையிறவு இராணுவ முகாமுக்கு மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்போது ஜெனரேட்டர் மூலமே இந்த முகாமிற்கு மின்சாரம் வழங்கப்பட்டுவருகிறது.

இந்த ஜெனரேட்டர்களில் ஒன்று பழுதடைந்து விட்டது என்றும் முகாம் வீதி வழியாக வரும் வாகனங்களை நிறுத்தி திரும்பி வரும்போது இதற்கான உதிரிப் பாகங்களை வாங்கி வரும்படி சிப்பாய்கள் நிர்ப்பந்திக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

(இ-10)

## 12 ஆம் திகதி பென்ஷன் இல்லை

### பத்திரங்கள் எரிந்தது காரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ் மாவட்டத்தில் பென்ஷன் பெறும் சகலருக்கும் இம் மாதம் 12 ஆம் திகதி முதல் வழங்கப்பட இருந்த பென்ஷன் கொடுப்பனவுகள் பிற்போடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் நடந்த குண்டுத் தாக்குதலில் எரிந்த லொறியோடு சேர்ந்து கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்பட்ட பென்ஷன் பத்திரங்கள் ஜூன் மாதத்திற்குரிய பற்றுச் சீட்டுக்கள், கொடுப்பனவுப் பட்டியல்கள் உட்பட வேறு பல ஆவணங்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

இதன் காரணமாகவே பென்ஷன் கொடுப்பனவுகளில் காலதாமதம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பென்ஷன் கொடுப்பனவு தொடர்பான புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## வெளியூர் ஊழியர் யாழ். செயலகத்தில் கையெழுத்திடலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஆனையிறவுக்கு அப்பால் வேலை செய்யும் அரச ஊழியர்கள் நேற்றுமுதல் யாழ். செயலகத்தில் உள்ள பதிவுப் புத்தகத்தில் கையெழுத்து இட்டு வருகின்றனர்

கடந்த ஒரு வார காலமாக கிளிநொச்சியில் நடந்துவரும் மோதல்கள் காரணமாக போக்குவரத்துசீர்குலைந்துள்ளது.

இதனால் ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அரச ஊழியர்கள் மீண்டும் அப்பகுதிகளுக்கு வேலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட ஊழியர்கள் யாழ். மேலதிக அரச அதிபருடன் தொடர்பு கொண்டதை அடுத்து நிலைமை சீராகும்வரை யாழ். செயலகத்தில் இவர்கள் கையெழுத்து இட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(உ-10)

### ★ அவர்கள் சொல்லும் புதுமுறை!

யாழ்ப்பாணம், ஜூன் 10

பலாலி இராணுவமுகாமில் அடகு நகைகளை மீட்க வருபவர்கள் பாதுகாப்பு அதிகாரிகளின் அனுமதியுடன் தாம் வரும் வாகனங்களை முகாமிற்குள் கொண்டு வரலாம். பின்னர் நகைகளை மீட்ட பின்னர் அந்த வாகனங்களிலேயே திரும்பிச் செல்லலாம்.

இப்படிச் செய்வதால்

(6ம் பக்கம் பார்க்க)



ரம்ழான் பெருநாளைக் கொண்டாடும் இஸ்லாமியப் பெருமக்களுக்கு உதயனின் நல் வாழ்த்துக்கள். (சிறப்பிதழ் 4ஆம் பக்கத்தில்)

## மலையகத்தில் பரந்த அளவில் படைகள் தேடுதல்

கொழும்பு, ஜூன். 10

மலையகம் எங்கும் பரவலாகத் தேடுதல் நடத்தப்படுகின்றது. இதனால் மலையகத் தமிழர் மிகுந்த அச்சத்துடனும், பதற்றத்துடனும் வாழ்கின்றனர்.

கடந்த நான்கு தினங்களாக நுவரெலியா, மஸ்கெலியா, ஹட்டன், தலவாக்கலை, உடப்புசலாவை போன்ற பிரதேசங்களில் உள்ள காடுகளில் இராணுவத்தினர் தேடுதல் நடத்தி வருகின்றார்கள். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரவு இரவாகத் தேடுதல் நடத்தும் ஆயுதப் படையினரால் பகலில் வேலைக்குச் செல்லும் தோட்டத் தொழிலாளர் இரவில் நிம்மதியாக நித்திரை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பல தோட்டத் தொழிலாளர் தாக்கப்பட்டுள்ளதாகவும் தோட்டத்துரைமார்களும் தாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மலையகத் தொழிலாளர்களின் வீட்டுக்குள் புகுந்து "புலி", "கொட்டியா" இருக்கின்றதா என்று கேட்டு அப்பாவிகள் தாக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

(இ-எ-6)

## கலவான எம். பி. குணசேகரா

கொழும்பு, ஜூன் 10

கலவான எம். பி.யாக திரு. டி. இ. எம். குணசேகரா என்பவரைக் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் குழு நியமித்துள்ளது.

விபத்து ஒன்றில் திரு. சரத் முத்தெட்டுவேகம மரணமானதைத் தொடர்ந்து கலவான தொகுதி எம்.பி பதவி காலியானது.

அந்த இடத்திற்கே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி 29 இல் ரஷ்ய விஜயம்

கொழும்பு, ஜூன் 10

ஜனாதிபதி ஜெயவர்த்தன ஜூன் 29 இல் சோவியத் ரஷ்யாவுக்குச் செல்கிறார்.

ரஷ்யாவுக்கு திரு. ஜெயவர்த்தன உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு செல்வது இதுவே முதல் முறையாகும்.

வர்த்தக, கலாசார உறவுகளைப் பலப்படுத்துவதே, திரு. ஜெயவர்த்தனவின் ரஷ்ய விஜயத்தின் நோக்கமாகும்.

(இ - எ)

### மறைந்த போராளிகளுக்கு

## ரெஸோ அமைப்பு நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 10

போராளிகள் தின இறுதி நாளான நேற்று தமிழ் ஈழ மாணவர் பேரவையின் (ரெஸோ) ஊர்வலம் இடம்பெற்றது.

யாழ் நவீன சந்தைக்கு முன்பாக உள்ள போராளிகள் நினைவுச் சுடர் முன்னிலையில் இந்த ஊர்வலம் ஆரம்பமானது.

நினைவுச்சுடரில் இருந்து நினைவுத்தீபம் ஏற்றப்பட்டு யாழ்நகரின் பாடசாலைகளுக்குஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

கறுப்பு, சிவப்பு, வெள்ளை நிறங்களடங்கிய சீருடையுடன் ரெஸோ உறுப்பினர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

இவ்வூர்வலம் முதலில் யாழ் பரியோவான் கல்லூரிக்கும் அதைத் தொடர்ந்து, நகரின் பல கல்லூரிகளுக்கும் சென்று இறுதியாக இராமநாதன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

10 — 6 — 1986
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10.22 முதல் 11 52 வரை

ராகுகாலம்:
2.52 முதல் 4 22 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

கற்கி ஜயந்தி

# ராஜீவிடமிருந்து முக்கிய கடிதம்

## ஜனாதிபதி ஜே. ஆருக்கு டிக்ஸிற் கையளித்தார்

கொழும்பு, ஜூன்.10

இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவின் நிலைமையை விளக்கும் முக்கிய கடிதம் ஒன்றை பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அனுப்பிவைத்தார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் அந்தக் கடிதத்தை நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் கையளித்தார்.

கடந்த மே மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன திரு. காந்திக்கு அனுப்பிவைத்த கடிதத்துக்குப் பதிலளித்தே நேற்றைய கடிதம் கையளிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி இலங்கை வந்து பேச்சு வார்த்தை நடத்திய சிதம்பரம் குழு மூலம் அரசாங்கம் தனது புதிய யோசனைகளை அனுப்பியிருந்தது.

அது சம்பந்தமான விளக்கம், வியாக்கியானம் தேவை என்று இந்திய அரசு கேட்ட போதிலும் அவை வழங்கப்படவில்லை.

அதன்பின்னர்மேமாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தன நீண்ட கடிதம் ஒன்றை ராஜீவ் காந்திக்கு அனுப்பியிருந்தார்.

பிரதமர் காந்தியின் பதிலைக் கையளித்த பின்னர் திரு. டிக்ஸிற்றும் திரு. ஜெயவர்த்தனவும் சுமார் 40 நிமிடங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளுடன் பேச இடதுசாரி தலைவர்கள் தமிழகம் பயணம்

கொழும்பு, ஜூன் 10

தமிழ்ப் போராளிகள் குழுக்களை மூன்று மாத யுத்த நிறுத்தத்திற்கு இணங்கச் செய்யும் முயற்சி ஒன்றை மேற்கொண்டு இலங்கையின் மூன்று இடதுசாரித் தலைவர்கள் தமிழகம் செல்கின்றனர்.

ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவின் ஆசியுடன் இவர்கள் தமிழகம் செல்லவிருப்பதாகத் தெரியவருகிறது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்நாட்டு இடதுசாரிகளின் உதவியை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நாடியிருக்கிறார் என்றும் —

தமிழகம் சென்று போராளிகளைச் சந்தித்து மூன்று மாதகால யுத்த நிறுத்தம் ஒன்றிற்கு இணங்கச் செய்யும்படி அவர் கோரியிருக்கிறார் என்றும் நேற்றைய உதயனில் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

இனப்பிரச்சினைக்கு எப்படியும் உடன் தீர்வு காண திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன பலவந்தப் படுத்தப்பட்டிருக்கிறார் என்பதே அவர் இடதுசாரிகளின் உதவியை நாடியதிலிருந்து புலனாகிறது என பி. பி. சி. நேற்றுத் தெரிவித்தது.

(உ)

## நேற்றும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன்10

வல்வெட்டித்துறை பருத்தித்துறைப் பகுதியில் நேற்றும் கடலில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

போராளிகளும் தாக்குதல் நடத்தினர்.

செய்தி எழுதப்படும் வரை சேத விபரங்கள் பற்றித் தெரியவரவில்லை.

(உ-10)

## வயாவிளான் முகாமிலிருந்து 'ஷெல்' தாக்குதல்கள்

### ஹெலிக்கொப்டரும் சுட்டது

பலாலி, ஜூன் 10

நேற்று அதிகாலை ஐந்து 'ஷெல்' குண்டுகள் வயாவிளான் இராணுவ முகாமில் இருந்து குரும்பசிட்டி - இடம்புலம், வடமூலை முதலியபகுதிகளை நோக்கி ஏவப்பட்டன.

'ஷெல்'கள் ஏவப்பட்டதைத் தொடர்ந்து ஹெலிக்கொப்டர் தொடர்ச்சியாக 9 மணி வரையும் ரோந்து புரிந்தது.

8.30 மணிக்கு வயாவிளான், கட்டுவன், மயிலிட்டிப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர் தாக்குதலை மேற்கொண்டது.

12.30 மணிக்கு மீண்டும் குரும்பசிட்டி வடக்குப் பகுதியை நோக்கி ஹெலிக்கொப்டர் தாக்கியது

பலாலி விமான நிலைய ஓடு பாதையூடாக வயாவிளான் தெல்லிப்பழை வீதிக்கு வந்த சிப்பாய்கள் கிறேசர் லேன் வழி

(6ம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சிச் சண்டையிலை தங்களுக்குத்தான் வெற்றி எண்டு றேடியோவிலை ரி. வி. யிலை தொண்டை கிழியக்கத்தினம் பேந்து ஏன் ஆட்களைக் கொண்டு வந்து இறக்குகினம் என்பது புரியாத புதிராய் எல்லோ, இருக்கு....

## யாழ் பல்கலைக்கழக ஊழியர் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம். ஜூன் 10

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஊழியர்கள் நேற்றுப் பிற்பகல் முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

யாழ் பல்கலைக் கழக வளவில் மே 20 ஆம், 21 ஆம் திகதிகளில் நடந்த சம்பவங்கள் குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறியதைத் தொடர்ந்தே வேலை நிறுத்தம் செய்வது என்று பல்கலைக் கழக ஊழியர் சங்கம் நேற்றுக் காலை தீர்மானித்தது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியில் இருந்தே வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

மே 20, 21 ஆம் திகதிகளில் இடம்பெற்ற சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் வரை வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவது என்று ஊழியர் சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்தது.

இப்படி ஊழியர் சங்கத் தலைவர் திரு ஆ.குணரத்தினம் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

## கண் கலங்கிய வண்ணம் கிளிநொச்சிப் பயங்கரத்தை விவரித்தார் அரச அதிபர்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

கிளிநொச்சியில் நிகழ்ந்த பயங்கரத்தை கலங்கிய கண்களுடன் விவரித்தார் அரச அதிபர்.

கிளிநொச்சியில் இறந்த தமது சாரதிக்கு ஏற்பட்ட கதியையே யாழ் அரச அதிபர் கலங்கிய கண்களுடன் மனந்தழும்பிய நிலையில் நேற்று விவரித்தார்.

இந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்த வேளையில் அவர் சில சந்தர்ப்பங்களில் பேச முடியாது தத்தளித்தார்.

இறந்த சாரதி எஸ் அருள்நாதனின் அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் இப்படிக் கலங்கினார்.

இந்தக் கூட்டம் நேற்று செயலக ஆலோசனை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரஸ்தாப கூட்டத்திற்கு செயலக ஊழியர்களும் யாழ் மாவட்ட அரச ஊழியர்களும் சமூகமளித்தனர்.

திரு. சு. கணேசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சி.

(6ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நீதிமன்ற இடம் மாற்றத்துக்கு

## மக்கள் அவை எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ் நீதி மன்றங்களை தற்போதைய இடத்தில் இருந்தும் இடம்மாற்றஞ் செய்வதை ஆட்சேபித்து மாவட்ட நீதிபதிக்கு மகஜர் அனுப்புவது என்று யாழ்ப்பாணம் மக்கள் அவை (இல; 26) தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மோட்டோ ஷெல், விமானத் தாக்குதல்கள் குறித்தும் அதனால் யாழ் நீதிமன்றங்களை வேறு இடத்துக்கு இடம்மாற்றஞ் செய்வது குறித்தும் 7-6-86 இல் நடந்த மக்கள் அவை (இல; 26)யின் மத்திய குழுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டது.

ஷெல் தாக்குதல்களைக் காரணம் காட்டி, கோட்டை முகாமைச் சுற்றியுள்ள அரச திணைக்களங்கள், நீதிமன்றங்கள் இடம்மாற்றம் செய்யப்படுவது புத்திசாலித்தனமான நடவடிக்கை அல்ல.

இப்படி எல்லா அலுவலகங்களும் இடம்மாற்றஞ் செய்யப்பட்டால், முகாம் விஸ்தரிப்புக்கு உதவுவதாக முடியும். அதன் காரணமாக அப்பகுதி குடியிருப்பாளர்களும் படிப்படியாக வெளியேற வேண்டிய அபாயம் ஏற்படலாம்.

இப்படி கூட்டத்தில் பல உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டனர்.

கூட்டமுடிவில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவை வருமாறு;

1. குடியிருப்புப் பகுதிகள் மீது மோட்டோ ஷெல், விமானத் தாக்குதலைக் கண்டித்து ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்புதல்.

2. நீதிமன்றங்களை இடம்மாற்றும் யோசனையைக் கண்டித்து மாவட்ட நீதிபதிக்கு மகஜர் அனுப்புதல்.

(அ-எ)

### 'அறவழி' வெளியீட்டு விழா

சாவகச்சேரி, ஜூன் 10
அறவழிப் போராட்டக் குழுவினரின் "அறவழி" மாதாந்த தமிழ்ப் பத்திரிகை வெளியீட்டு விழா அறவழிப் பணிமனையில் நடைபெற்றது.

போராட்டக் குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் தலைமையில் மௌன பிரார்த்தனையுடன் ஆரம்பமான இவ் விழாவில் பண்டிதர் திரு. செ. சிவலிங்கம் முதலாவது பிரதியை வெளியிட்டார்.

அதனை கலைவாணி வித்தியாலய அதிபர் திரு. நா. கந்தையா பெற்றுக் கொண்டார்.

ஓமந்தை மகா வித்தியாலய அதிபர் திரு. க. இளையதம்பி, திரு. ஏ. கே. இராமலிங்கம், திரு. வி. எஸ் துரைராசா ஆகியோரின் ஆசியுரைகளைத் தொடர்ந்து திருவாளர்கள். வி. ஜீ. தங்கவேலு, ஏ. நடேசபிள்ளை, க. சி. சண்முகலிங்கம், என். எம். சண்முகநாதன் ஏ. சி ரவிச்சந்திரன் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றனர்.

(இ-31)

### தெரிவில் ஈடுபட்டவரே கதாநாயகி ஆனார்

கமலஹாசனின் ஆலோசனையின் பேரில் பூனா திரைப்படக் கழகக் கல்லூரியில் சேர சுஹாசினி முதலில் விண்ணப்பித்தார்.

வயது குறைவு காரணமாக விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

பின்னர் தமிழ்நாடு அரசு நடத்தும் திரைப்படக் கல்லூரியில் சேர்ந்தார்.

புகைப்படப் படிப்பாளர்துறையில் சித்தி எய்திய பின்னர், ஒளிப்பதிவாளர் அசோக் குமாருக்குத் துணையாக பணிபுரிந்து வந்தார்

'நெஞ்சத்தைக் கிள்ளாதே' திரைப்படத்தில் நடிப்பதற்கு அச்சமயம் கதாநாயகி தெரிவு இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

அசோக்குமாருடன் சேர்ந்து சுஹாசினியும் சில நடிகைகளை படம் பிடித்து கதாநாயகி 'டெஸ்ட்' பார்த்தார்'

'நெஞ்சத்தைக் கிள்ளாதே'யில் பத்மினி கோலப்புரிதான் முதலில் நடிப்பதாக இருந்தது. திடீரென்று அது சரிவராமற் போகவே டைரக்டர் மகேந்திரன் திணறிப்போனார், கதாநாயகி ஒருவரைத் தெரிவு செய்வதில்.

ஒரு நாள் அசோக் குமாருடன் பணிபுரியும் சுஹாசினியைக் கண்டார் இறுதியில் 'நெஞ்சத்தைக் கிள்ளாதே'யில் கதாநாயகி தெரிவில் ஈடுபட்டவரே கதாநாயகி ஆனார்.

சிறந்த நடிகையான சுஹாசினி தமிழ்ப்பட உலகில் ஆபாசமாக நடிக்க மறுத்ததன் காரணமாக, இன்று ஆந்திராவில் பிரபல நடிகையாகி விட்டார்.

ஜெயசுதா ஓய்வினால் காலியான இடத்தை சுஹாசினி தெலுங்குப் படவுலகில் பூர்த்திசெய்து விட்டார்.

தினசரி சினிமா

# பனம் பானத்திற்கு வடக்கில் பெரும் மவுசு

பலாலி ஜூன் 10
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு தருவிக்கப்பட்டு வந்த போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதன் காரணமாக யாழ்ப்பாண உற்பத்தியான பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் பனம் பானத்திற்கு அதிக மவுசு ஏற்பட்டிருக்கிறது.

'கற்பகம்' விற்பனைச் சாலைகளில் விற்பனையாகும் இப்பானத்திற்கு யாழ் நகரில் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற காரணத்தால் அதன் உற்பத்தியை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை பனை அபிவிருத்திச்சபை எடுத்திருக்கிறது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் குறிப்பாக தீவுப் பகுதிகளில் சீனிக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டின் காரணமாக 'பனங்கட்டி' அதிக அளவில் விற்பனையாகத் தொடங்கியுள்ளது.

யாழ்நகரில் கொழும்புச் சோடாக்கள் 6 ரூபா முதல் 10 ரூபா வரை விற்பனையாவதாலும்-

அவற்றின் போலித் தயாரிப்புக்கள் சந்தைக்கு வந்திருப்பதாலும் பனம் பானத்திற்கு அதிக மவுசு ஏற்பட்டிருக்கிறது.

(உ-119)

### லெபனானுக்கு அடுத்து இலங்கையில் தான் பயங்கரவாதம் தீவிரம்

### "தினரஸ" கூறுகிறது

கொழும்பு, ஜூன் 10
லெபனான் நாட்டை அடுத்து உலகில் இலங்கையில் தான் பயங்கரவாதம் தீவிரமாக தலைவிரித்தாடுகிறது.

இப்படி சுதந்திரக் கட்சி ஆதரவு சிங்கள நாளிதழான 'தினரஸ' ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

தொடர்ந்து இடம் பெற்று வரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு ஜெயவர்த்தன அரசுதான் அரசியல்ரீதியான பொறுப்பை ஏற்க வேண்டும்,

ஜனாதிபதி ஜெயவர்த்தன இப்பொழுது மக்களுக்குத் தன்னால் பாதுகாப்பு வழங்கமுடியாது இருப்பதாகக் கூறுகிறார்.

எல்லாரும் சேர்ந்து இந்த அரசாங்கத்தை ராஜினாமாச் செய்யும்படி நிர்ப்பந்திக்க வேண்டும்.

இப்படி 'தினரஸ' ஆசிரியர் தலையங்கம் கோரியுள்ளது, (உ-எ-2)

### பிரசைகள் குழுவின் புதிய அலுவலகம்

பருத்தித்துறை ஜூன்,10
பருத்தித்துறைப் பிரசைகள் குழுவிற்கான புதிய அலுவலகம் தும்பளை வீதியில் பருத்தித்துறைப் பிரசைகள் குழுத்தலைவர் பேராசிரியர் வி கே.கணேசலிங்கத்தினால் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த அலுவலகம் தும்பளை வீதியிலுள்ளதெங்கு பனம் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஸ்தாபனம் இருக்கும் கட்டடத்தில் அமைந்திருக்கிறது.

இங்கு பருத்தித்துறைத் தொகுதிக்கான இணக்க சபை தலைமைப் பணியகமும், பருத்தித்துறை ஆரம்ப சுகாதாரக்கவனிப்புக் குழுவின் இணைப்புக் குழுத் தொழிற்பாடும் இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது

(உ—109)

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### தடுத்து வைத்திருப்போரைப் பார்க்க இணைப்பு அதிகாரியின் அனுமதி தேவை

மட்டக்களப்பு, ஜூன் 10
மட்டக்களப்புபொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பார்வையிட வரும் பெற்றோர் இனி பிரசைகள் குழுவின் கடிதம் பெற்றாலும் இணைப்பு அதிகாரியின் அனுமதியையும் பெறவேண்டும்.

மேற்கண்டவாறு மட்டக்களப்பு இணைப்பு அதிகாரி திரு. டொனல்ட் மென்டிஸ் பிரசைகள் குழுவினரிடம் தெரிவித்தார்.

பிரசைகள் குழு இம்மாவட்ட தற்போதைய நிலவரம் குறித்து இணைப்பு அதிகாரியுடன் உரையாடியது.

பிரசைகள் குழுவினரால் இணைப்பு அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிரச்சினைக்களுக்கு இணைப்பு அதிகாரி மேலும்பதிலளிக்கையில்-

விவசாயிகளுக்கு விசேட அடையாளக் கார்ட்டை வழங்குவதால் பயன் ஏற்படமாட்டாது.

வயல் உரிமையாளர்கள், தொழிலாளிகள் பெயர்ப் பட்டியல், அடையாளக் கார்ட் இலக்கம் சகிதம் தொடர்பு கொண்டால் அனுமதிக் கடிதம் தரப்பட்டு பிரதி சம்பந்தப்பட்ட முகாம் பொறுப்பதிகாரிக்கும் அனுப்பி வைக்கப்படும்— என்றார்.

(இ-21)

### பதவி நீக்கம்

கிளிநொச்சி, ஜூன்10
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஒருவர் தமது பதவியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

அரசாங்க அதிகாரி ஒருவர் தலைமையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

கிராம அபிவிருத்திச் சங்க உபவிதி ஆறுவது பிரிவின் உபபிரிவு மூன்றின் கீழ் கிராம அபிவிருத்தி சங்கத்தின் நோக்கங்களுக்கு எதிராக செய்யப்பட்ட காரணங்களுக்காக சம்பந்தப்பட்டவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து புதிய தலைவர் தெரிவும் நடைபெற்றது

(இ ஒ - 76)

### விதைகள் சேகரிப்பு பற்றி வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்மாவட்ட விவசாயிகள் தமக்குத் தேவையான விதை வகைகளைத் தாமே சேகரித்துப் பேணி வைப்பது அவசியம். இன்று நிலவும் போக்குவரத்து ஏனைய பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு அவ்வாறு செய்வது சமத் தொழிற் செய்கை இப் பகுதியில் தடைப்படாது தொடர அவசியமானதாகும்.

தென்னை நாற்று மர விநியோக நிகழ்ச்சி கீரிமலையில் நடைபெற்ற போது யாழ். மாவட்ட கமநலசேவை சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. கந்தசாமி பரமலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

கீரிமலை கமநலசேவை நிலையத் தலைவர் திரு. வை. டி. சேனாதிராசா நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். திரு க. பரமலிங்கம் தொடர்ந்து கூறியதாவது;—

வட்டக்கச்சி, அலம்பில் ஆகிய இடங்களில் அரசாங்க நாற்றுமேடைகள் இயங்காத காரணத்தால் இம் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டது. கீரிமலை, அம்பன், சாவகச்சேரி ஆகியபகுதிகளில் தென்னை நாற்றுமேடை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தேங்காய் விலை ரூபா ஐந்திலிருந்து எழுபத்தைந்து சதமாக வீழ்ச்சி அடைந்தபோதுஇம்முயற்சிக்கு மேலும் ஊக்கம் கிடைத்தது.

எமதுபகுதிகளில் எதிர்பாராத விதத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் காரணத்தால்நீண்டகாலஞ்சென்றுபயன்தரும் தென்னைச் செய்கையில் ஈடுபட்டு இருப்பவர்கள் தமது உடனடித்தேவையைப் பூர்த்தி செய்ய சிறு தானியங்களாகிய குரக்கன், சாமை, வரகு ஆகியவற்றைப் பயிரிட வேண்டும்.

இவ்வாறு திரு. க.பரமலிங்கம் மேலும் தெரிவித்தார்.

(உ-9)

### வயாவிளானில் சேதமடைந்த வீடுகள்

பலாலி ஜூன்.10
கடந்த வாரம் வயாவிளானில் இடம்பெற்ற தீ வைப்புச் சம்பவத்தில் சில வீடுகள் சேதம் அடைந்தன.

மற்றும் சில வீடுகளின் கதவுகள், யன்னல் கண்ணாடிகள் உடைத்து நொருக்கப்பட்டன.

தீவைப்புக்குபெற்றோல் குண்டுகள் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

பின்வருபவர்களுடைய வீடுகளும் குடிசைகளுமே சேதமாக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் உள்ளன.

திரு. முத்தையா (பிரசைகள் குழுச் செயலாளர்) திரு பொன்னுத்துரை, திரு. நடராசா, திரு. தில்லைராசா, திரு. சிவபாலன்- இவரது வீட்டு யன்னல்கள் உடைக்கப்பட்டும் கதவுகள் பிரிக்கப்பட்டும் உள்ளன.

(இ-119)

### அராலிப் பகுதிக்கு மேலதிக விதை வெங்காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
அராலிப் பகுதியில் 550 கிலோ பம்பாய் வெங்காய விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு உள்ளன

மேலும் இருநூறு கிலோ பம்பாய் வெங்காய விதை இப்பகுதியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கருத்தரங்கு ஒன்று அண்மையில் சங்கானையில் நடைபெற்ற போது சிறப்புரை ஆற்றிய யாழ் மாவட்ட கமத்தொழிற் காப்புறுதி பணிப்பாளர் திரு. சு. சிவகுரு இவ்வாறு கூறினார்.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு கே. சிதம்பரநாதன் இந்த விவசாய கருத்தரங்குக்குத் தலைமை வகித்தார்.

"கமநல சேவை நிலையத்தினால் தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக பம்பாய் வெங்காய விதைகளை வழங்க முடியவில்லை. எனவே கமநலசேவை நிலையங்களின் சிபார்சின் அடிப்படையில் தனிப்பட்ட வர்த்தகர்கள் மூலம் இவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விதை வெங்காயத்தினை விலைக்கட்டுப்பாட்டின் அடிப்படையில் விற்குமாறு தனிப்பட்ட வர்த்தகர்களுக்குப் பணிப்புரையும் வழங்கப்பட்டுள்ளது.

—இவ்வாறும் திரு. சிவகுரு தனது சிறப்புரையில் எடுத்துரைத்தார்.

விதைகள், உரவகைகள், கிருமிநாசினிகள் போன்ற விவசாயிகளுக்குத் தேவைப்படும் அனைத்தையும் அவர்கள் கமநலசேவை நிலையங்களில் பெறுவதற்கு வசதி செய்து தரவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தார்கள்.

கமநல சேவை நிலையங்களில் நிகழும் களவுகள் கொள்ளைகள் காரணமாக விவசாயிகளுக்கு இவ்வசதிகளைச் செய்து கொடுக்க முடியாது இருப்பதாகத் திரு. சிவகுரு விளக்கிக் கூறினார்.

இறக்குமதி செய்யப் படும் விதை உருளைக் கிழங்கினை நேரடியாக யாழ்ப்பாணத்துக்குத் தருவித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தார்கள்.

விவசாயிகளின் பிரச்சினைகளை எடுத்துக் கூறிய திரு. சிதம்பரநாதன் தனது தலைமையுரையில் விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் விளக்கினார்.(உ-ஒ-9)

### வீதி புனரமைப்பு

மண்டைதீவு, ஜூன்.10
ஊர்காவற்றுறை அன்னை வேளாங்கண்ணி மாதா தேவாலயத்திற்குச் செல்லும் வீதி புனரமைக்கப்படவிருக்கின்றது.

இதற்கான நிதி, யாழ் அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ- 88)

### மணி ஓசை இறைவனை நினைவுபடுத்த உதவுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 10
உலக மாயையில் அழுந்தும் மனிதனுக்கு மணி ஓசை இறைவனை நினைவுபடுத்திநல்வழியில்செல்ல வாய்ப்பளிக்கிறது.

நவாலி வடக்கு தேற்று மரத்தடி ஞானவயிரவர் கோயிலில் மணிக்[illegible] கோபுர அத்திவாரக்கல் [illegible] பிரதம பரிபாலன தர்ம கர்த்தா திரு. சி இராஜேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரபல வர்த்தகர் திரு. ந ப. நடராசா மணிக் கூண்டுக் கோபுர அத்திவாரக்கல்லை நட்டார்.

கட்டடச்சிற்பி திரு மு. மார்க்கண்டு இக்கோபுர [illegible] பூர்வாங்க வேலைகளைச் [illegible] பணியைத் தொடக்கி வைத்தார்,

(இ-9)

### எம்.பிக்கள் கேட்டதால் ஆயுதங்கள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டன

### லலித் கூறியதாக நீதிமன்றத்தில் சாட்சியம்

கொழும்பு, ஜூன் 10
காரைதீவுச் சம்பவங்கள்தொடர்பாக அமைச்சர் லலித்திடம் நேரடியாக முறையிட்டேன்.

முஸ்லிம்களுக்கு ஆயுதம் வழங்கி, தமிழர்களைத் தாக்கும்படி அதிரடிப் பொலீஸ் தூண்டுவது அநியாயமானது என்றேன்.

முஸ்லிம் எம். பிக்களின் வேண்டுகோளின் பேரிலேயே முஸ்லிம்களுக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டனஎன்று அமைச்சர் சொன்னார்.

இவ்வாறு கல்முனைப் பிரசைகள் குழுத் தலைவர் திரு. போல் வேலுப்பிள்ளை நல்லநாயகம் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான அவதூறு வழக்கில், எதிரியான திரு. நல்லநாயகம் சாட்சியம் அளித்தார்.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கே. விக்னராஜா முன்னிலையில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது.

கடந்த திங்கள் முதல் எதிரி தரப்புச் சாட்சியங்கள் பதிவு செய்யப்படத் தொடங்கின.

முதலாவதாக எதிரி சாட்சியம் அளித்தார்.

திரு. எஸ். நடேசன் கியூ. சி. நல்லநாயகத்தின் சாட்சியத்தை நெறிப்படுத்தினார்.

திரு. நல்லநாயகம் (வயது 61) சொன்னதாவது;-

நான் ஒரு இலங்கைப் பட்டதாரி. மனைவியும் பட்டதாரி. காணி அபிவிருத்தி அதிகாரியாக அரச சேவையில் சேர்ந்தேன். மொழிப் பிரச்சினை காரணமாக 1972 இல் சிரேஷ்ட உதவி இயக்குநர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றேன். அதன்பின்னர் கனடாவுக்கு குடும்பத்துடன் சென்றுவிட்டேன். பிறந்தநாட்டில் சேவைசெயயும் எண்ணத்துடன் வந்தேன்.

1984ஆம் ஆண்டில்மக்களின் வேண்டுகோளுக்கிணங்க கல்முனைப் பிரசைகள் குழுத் தலைவரானேன். நான் கனடாவின் பிரசை என்று தெரிவித்தும் மக்கள் அது பற்றிக் கவலை இல்லை என்று தெரிவித்தனர்.

பிரசைகள் குழுத் தலைவர் என்ற முறையில் அமைச்சர் அத்துலத் முதலியைப் பலமுறை சந்தித்தேன்.

1985 ஏப்ரலில் காரைதீவுச் சம்பவம் இடம் பெற்றது. மன்னாரில் மூன்று முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதைத்தொடர்ந்து முஸ்லிம்கள் ஆத்திரமுற்று இருந்தனர்.

காரைதீவில் தமிழர் தாக்கப்பட்டனர்.சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டன. இது பற்றி அமைச்சர் அத்துலத் முதலிக்குச்சொன்னேன். முஸ்லிம்களுக்கு ஆயுதம் வழங்கி தமிழர்களைத் தாக்க அதிரடிப்பொலீஸ் தூண்டுவது அநியாயமானது என்று அமைச்சருக்குச் சொன்னேன்.

அதிரடிப் பொலீஸை முகாம்களுக்குள் வைத்திருக்கும்படியும் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதத்தைத் திரும்பப் பெறும்படியும் அமைச்சரைக் கேட்டேன்.

முஸ்லிம் எம். பிக்களின் வேண்டுகோளின் மீதுதான் முஸ்லிம்களுக்குத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டன என்று அமைச்சர் பதிலளித்தார்.

இச் சம்பவங்களுக்கும் அதிரடிப் பொலீஸார் மீதான முறைப்பாட்டுக்கும் தொடர்புஇல்லை என்றும் அமைச்சர் சொன்னார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

இதனிடையில் கனடாவின் இலங்கை உதவித் தூதர் திரு. புருஸ்பார்னெற்என்பவரை சாட்சியாக அழைக்கவேண்டும் என்ற எதிர்தரப்பு விண்ணப்பத்தைநீதிபதி அனுமதித்தார். (உ-எ)

### இன்று பொதுக்கூட்டம்

பருத்தித்துறை.ஜூன் 10
வடமராட்சி வடக்கு கிழக்கு ஒய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் 20 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் திரு. சி. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இப் பொதுக் கூட்டத்திற்குப் பிரதம விருந்தினராக யாழ். கச்சேரி ஓய்வூதியத் திணைக்களக் கணக்காளர் திரு. வ. இராமச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

பருத்தித்துறை தேர்தற் தொகுதியில் வசிக்கும் ஓய்வூதியம், விதவைகள் அனாதை ஓய்வூதியம் பெறுவோர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் சட்டத்தரணி திரு. ஆர். உருத்திரா அறிவித்துள்ளார். (உ-109)

### நினைவலைகள்

வீரா போக்குவரத்துக் கம்பனி ஊழியர்

செ. கௌதமராஜா

அவர்கள் 1986-06-04 இல் கிளிநொச்சியில் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி அகால மரணமடைந்தார்;—



அன்பு மொழியால்
அரவணைக்கும் கரங்களால்
புன்னகையால்
நன்மைதனையே செய்யும்
நற்பண்பால்
எம்மிடையே
நீ
வாழ்ந்த வாழ்வு;—

எரிந்த நெருப்பால்—அதை
ஏவிய அரக்கரால்
எம்மை விட்டு அகலாது—மாறாக

சுடர் விட்டு, ஒளிதந்து
துணைவந்து நிலைகொள்ளும்
நினைவலைகள் நெஞ்சூடே
நித்தமும் ஒலியெழுப்பும்

ஸ்ரீ ஐயனார் ஸ்ரோர்ஸ்
31,33, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு.

உன் துயரால் வாடும்
தாய், தந்தை,
சகோதரர்கள்,
மனைவி, பிள்ளை,
அ. கு. வீரசுப்பிரமணியம்
(உரிமையாளர் ஸ்ரீ ஐயனார் ஸ்ரோர்ஸ்)
குடும்பத்தினர்,
சக ஊழியர்கள்,
நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு விளம்பர அனுபந்தம்

# கடல்வளம் கம்பனி (பொது) லிமிட்., சிறப்பிதழ்

## கடல் வளம்: சிறிய ஆரம்பம்; அது கடல் அலைபோல் பெருகும்

### முகாமை இயக்குனர் விடுக்கும் செய்தி

எமது பிரதேசம் போதியளவு கடல் வளத்தால் சூழ்ந்திருந்தும், அதை மேலான பொருளாதார வளமாக்க நாம் இதுவரை சரியாக முயற்சிக்கவில்லை. சீநோர் என்ற ஸ்தாபனம் கடல் வளத்திற்கு ஓரளவு கண் திறந்து சமூக பொருளாதார மாற்றம் ஏற்படும் வேளையில் பல்வேறு காரணங்களினால் வளர்ச்சி தடைப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் தனியார் ஸ்தாபனங்களின் ஆக்கிரமிப்பு ஏற்பட்டது.

இத்தகைய நிலையில் நாட்டு வளங்கள் மக்களுக்கே சொந்தம், எமது மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் உதித்ததுதான் கடல்வளம் கம்பனி (பொது) லிமிட்டட். எமது முதல் முயற்சி சிறியதாக இருந்தாலும், அடுத்தடுத்த சட்டங்களில் இது விரிவுபடுத்தப்பட்டு, சேகரிப்பு நிலையங்கள் அமைத்தல், செயற்கை முறை மீன், இறால் வளர்ப்பு, ஆழ்கடல் மீன்பிடி, வள்ளங்கள் நிர்மாணம் ஆகிய துறைகளில் ஈடுபடும் திட்டங்கள் இருக்கின்றன. எமது முதல் முயற்சியான கடல் உணவு பதனிட்டு ஏற்றுமதி செய்யும் திட்டத்தில் தேவைப்படும் முதலீடு ஏறத்தாழ 20 லட்சம் ரூபா. இதற்குரிய நிதியை பொதுமக்களிடமிருந்து பங்குகளாகப் பெற்று வருகின்றோம். ஆரம்ப கட்டத்தில் சுமார் 75 பேருக்கு வேலை வாய்ப்பு உண்டு. மற்றும் உப தொழில் வாய்ப்புகளும் உண்டு.

அது மாத்திரமல்ல! கடல் வளத்தைப் பொறுத்தமட்டில் மக்கள் சுதந்திரமாக தொழில் புரியும் வாய்ப்பினையும், மீனவர் சமூகத்தின் வாழ்க்கை நிலை மேம்படவும் இந்த மக்கள் ஸ்தாபனம் பாடுபடும்.

மக்களுக்குரிய பொருளாதார வாய்ப்பினை, வசதிகளை, இத்தகைய மக்கள் ஸ்தாபனங்களை ஏற்படுத்தி மேம்படுத்துவோம், பங்கு வகிப்போம், பொருளாதார வளங்களை விரிவுபடுத்துவோம் என்று எல்லோரும் உறுதி மொழி எடுத்துக் கொள்வோமாக!

சி: முத்துநேசராசா

## கடல்வளம் முயற்சி சிறக்கட்டும்

### பேராசிரியர் கணேசலிங்கம் வாழ்த்து

கடல்வளம் ஒரு முக்கிய இயற்கை வளமாகும். மீன், இறால், நண்டு, கடலட்டை போன்ற விலங்கு வளங்களையும், கடல்தாவர வளங்களையும், இரசாயன வளங்களையும் ஒருங்கே கொண்ட கடலில் இருந்து, சிறந்த வருவாயை எடுப்பதற்கு நாம் முயற்சி செய்வது அவசியமாகும்.

இது எமது பொருளாதாரத்துக்கும் அந்நிய செலாவணிக்கும் ஒரு முக்கிய பங்கைத்தரவல்லது. இம்முயற்சிகள் விஞ்ஞான முறையில் நடாத்தப்படும் போது தான் அதிக அளவு நன்மைகள் பெற முடியும்.

'கடல்வளம் கம்பனி லிமிடெட்' இம்முயற்சியில் இறங்கியுள்ளது பாராட்டத்தக்கது. கடல் உணவினை கொள்முதல் செய்து, பதனிட்டு, களஞ்சியப்படுத்தி, வெளிநாட்டுக்கு அனுப்பி அந்நிய செலவாணி பெறுவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. இம்முயற்சி ஒரு பெருமுயற்சியாகும். அத்தோடு இது ஒரு நன் முயற்சியுமாகும்.

இம்முயற்சி சிறந்ததாக அமைந்து சிறப்புடன் தொடரப்பட வேண்டுமென ஆசி கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பேராசிரியர் V. K, கணேசலிங்கம்
B Sc (Cey) M Sc (Hawai) Phd (Lond)
09 - 06 - 86.
தலைவர், விலங்கியற்றுறை
யாழ் - பல்கலைக்கழகம்.

## பிரதேச கடல் வளத்தை பெரிய அளவில் பயனாக்கி பொருளியல் விருத்தி காண்போம்

### சீ. மகேந்திரன்
இயக்குனர், மேர்ச்சண்ட் பினான்ஸ் கம்பனி

இலங்கையில் உற்பத்தியாகும் கடல் உணவில் இருபத்தைந்து வீதமானவை யாழ்ப்பாணத்து மீனவர்களின் முயற்சியினால் பெறப்படுகின்றன. யாழ்மாவட்ட கடல்வளத்தில் இருபத்தைந்து வீதமானது மட்டுமே இதுவரை பெறப்படுகிறது என்பதம் குறிப்பிடத்தக்கது

மீன்பிடித் துறையில் எமது மாவட்டத்தில் சீநோர் அபிவிருத்தி நிறுவனம் நல்ல பங்களிப்பைச் செய்தது. பழைய முறைகளைக் கைவிட்டு நவீன மீன்பிடி உத்திகளைக் கையாளும் அனுபவத்தை இந்த நிறுவனம் நமது மீனவர்களுக்கு வழங்கியது. பதனிடும் தொழில்நுட்பங்களை அவர்களுக்குப் போதித்தது. ஆயினும் துரதிர்ஷ்டவசமாக இந்த நிறுவனத்தின் செயற்பாடு பாதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையிலும், எமது மாவட்ட கடல்வளத்தில் 75வீதம் முறையாக முழுமையாகப் பயன்படுத்தாத நிலையிலும், கடல் வள கம்பனி லிமிட்டட் நிறுவனம் உதயமாவது இம்மாவட்டஅபிவிருத்தியில் ஒரு மைல்கல் எனலாம்.

கடலுணவை மீனவர்களிடமிருந்து விலைக்குக் கொள்வனவு செய்தல்.

ஆலையில் அவற்றைப் பதனிடுதல்.

பதனிடப்பட்ட கடலுணவை பைக்கட்டுகளில் அடைத்துக் களஞ்சியப்படுத்தல்.

பிற மாவட்டங்களுக்கு அனுப்புதல்; வெளிநாடு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்.

—இவை இந்த நிறுவனத்தின் முக்கிய சேவைகளாக அமையவுள்ளன.

(5 ஆம் பக்கம் பார்க்க)

### இயக்குனர் சபை

திரு. சி. முத்துநேசராசா
(கணக்காளர்)

திரு. சு. பாலச்சந்திரன்
(உரிமையாளர், உமா இன்டஸ்றீஸ்)

திரு. மு. குணரத்தினம்
(இயக்குனர், றெபெர்ட் ஏ வில்சன் கம்பனி லிமிட்.)

திரு. சு. பசுபதிப்பிள்ளை
(இயக்குனர் எஸ். பி. கோ. லங்கா லிமிட்)

திரு: சு. ஆனந்தராசா
(இயக்குனர், சிவ் றிபிறிஜிறேசன் என்ஜினியர்ஸ்)

திருமதி கேசவமலர் இராசரத்தினம்

திரு. இ. கணேந்திரன்
(இ. நா கடல் உணவு ஆலோசகர்)

### ஆலோசனைக் குழு

திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை
M. D., Merchant Finance

திரு: க. அருணாசலம்
Principal, Victoria College, Chulipuram

திரு. இ. விஜயரட்ணம்
Lion's Vaddukkoddai

திரு. இ. ச. கேட்டிஸ்
Mercantile Credit

திரு. சு. சுப்பிரமணியம்
Rtd, A I.

திரு. சி. இ. குணரத்தினம்
Rtd Adm., Manager, Cement Corp., K K. S

திரு: கே. எஸ். ஆறுமுகம்
M. D. Yarl PalmBranbh Industries

## கம்பனியின் விவரம்

செயலாளர்:
திரு. ஆர். என். வரேந்திரன்,
பட்டயக் கணக்காளர்.

சட்டத்தரணி:
திரு. எஸ். கிருஷ்ணகுமார்,
சட்டத்தரணியும் நொத்தாரிசும்.

பதிவாளர்-கணக்காளர்:
பிஸினஸ் பிறமோட்டேர்ஸ் (பிரைவேட்) லிமிட்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கணக்குப் பரிசோதகர்:
வே. அரியரத்தினம் அன்ட் கம்பனி,
பட்டயக் கணக்காளர்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வங்கி:
வர்த்தக வங்கி நிறுவனம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தேவைப்படும் முதலீடு:
ரூபா 2,000,000/-

பங்கு விவரம்:
ஒவ்வொன்றும் ரூபா 10/- பெறுமதியான 200,000 சாதாரண பங்குகள்.

பங்குதாரர்:
ஆகக் குறைந்த பட்சம் நூறு (100) பங்குகளை உடையவராக இருத்தல் வேண்டும்.

தொழிற்சாலை:
பொன்னாலை,
சுழிபுரம்.

தலைமை அலுவலகம்:
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24013

மேலதிக விவரங்களுக்கு தயவு செய்து தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**இது ஒரு விளம்பரமே தவிர நிறுவனத்தின் கையேடு அல்ல**

### எதிர்காலத் திட்டங்கள்

* முதல் வருடம்: தொழிற்சாலை பொன்னாலை (கொள்வனவு 600 Kg. ) நாள்)
* 2 ஆவது வருடம்: சேகரிப்பு நிலையங்கள் அமைத்தல்
* 3 ஆவது வருடம்: செயற்கைமுறை மீன், இறால், வளர்ப்பு
* 4 ஆவது வருடம்: வள்ள நிர்மாணம்
* 5 ஆவது வருடம்: ஆழ்கடல் மீன்பிடி

### கம்பனியின் செயல்பாடுகள்

* கடல் உணவு கொள்வனவு
* கடல் உணவு பதனிடுதல்
* களஞ்சியப் படுத்தல்
* கடல் உணவு ஏற்றுமதி


இதய நல் வாழ்த்துக்கள்
மெர்ச்சன்ட் பினான்ஸ் லிமிட்;
முதல் மாடி
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துகின்றோம்!
★
கொமேஷல் அச்சகம்
70, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 22615

புகழுடன் தோன்றி வளமாக வாழ்க!
மலரி சேவிஸஸ்
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

கடலெனப பரந்து சிறப்புடன் வளம் காண்க!
ஜெயா வைண்டிங் வேர்க்ஸ்
54 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

கடல் வளத்தால் பொருளாதார வளம் காண்க
வாழ்த்துகின்றோம்!
★
அ. சுப்பையா & சன்ஸ்
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

வளம் காண வாழ்த்துகின்றோம்!
★
சிங்கர் கம்பனி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 23141

திரைகடல் ஓடி திரவியம் சேர எம் உளம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்
★
'Siv' Refrigeration Engineers,
Clock Tower Road,
JAFFNA

வாழ்க!
வளர்க!!
★
டைனமிக் எஞ்ஜினியர்ஸ்,
476, பிரதான வீதி,
கண்டிக்குளி.
தொலைபேசி; 22115

நெஞ்சம் நிறைந்த
வாழ்த்துக்கள்!
★
ச. சரவணபவன்
292/2, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

கடலில் வளம் கண்டு
குடா நாட்டில் வளம் காண
ஆசிகள்!
★
R. T. R.
மூளாய், சுழிபுரம்

கடல் வளத்தில் வளம் காண
வாழ்த்துகின்றோம்
பொருத்தமான தொழில் நுட்ப சேவைகள்,
121, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 23365

வாழ்க! வாழ்க!!
வளமுடன் வாழ்க!!!
றெபேட் ஏ. வில்சன் கம்பனி லிமிட்;
76. ஆத்திசூடி ஒழுங்கை,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

( ரம்ழான் சிறப்பிதழ் - ரமழான் சிறப்பிதழ் - ரம்ழான் சிறப்பிதழ் )

# மாண்பும் மகிமையும் நிறைந்தது ரம்ழான்

## அல்லாஹவின் பெயரால் நோன்பு இருப்பதால், ஆத்மா தெளிவு பெற்று உயர்கிறது.

மாதங்களில் பெரும் மாண்பும், மகிமையும் வாய்ந்தது ரமழான். இப்புனிதத் திங்கள் 27-ம் இரவில் இறைவன், தனது அளப்பருங் கருணையால் மனிதகுலத்தின் நேர்வழிக்காக இஸ்லாத்தின் கருவூலமாகிய திருக்குர்ஆனை இறக்கி வைத்தான். இதுபற்றி திருமறையில்,

"ரமழான் மாதம் எத்தகையது என்ருல் அதில் தான் மக்களுக்கு நேர் வழியாகவும், தெளிவான சான்ருகவும், நன்மை தீமைகளைப் பிரித்தறிவிக்கக்கூடியதாகவும் உள்ள திருக்குர்ஆன் அருளப்பட்டது. எனவே, உங்களில் இம்மாதத்தை அடைபவர் நோன்பு நோற்கவும்'' என்று கூறப்பட்டுள்ளது.

"ஆண்டவன் ஒருவன்; மனிதர்கள் எல்லாம் சகோதரர்கள்'' என்ற உண்மையை ஐயந்திரிபு அற்ற முறையில் உபதேசிப்பது இஸ்லாம் ஒன்றேதான். இதனுல் அது உலகின் பலதிறப்பட்ட மக்களை பூரண சமத்துவ அடிப்படையில் இணைத்துப் பிணைக்கும் ஓர் உன்னத சக்தியாக விளங்குகின்றது. இதனைப் பின்பற்றும் முஸ்லிம்கள் வேறுபட்ட பொருள் நிலைகளில் இருந்த போதிலும், அவர்களிடையே அப்பழுக்கற்ற ஆத்மீகச் சமத்துவத்தை நிலவச் செய்வதே நோன்பின் நோக்கமாகும்.

அவர்களுக்காக சேவை செய்யும் எண்ணம் பிறக்கிறது. இதனுல், 'நாமும் வாழவோம்; பிறரும் வாழட்டும்' என்ற தத்துவம் பணம் படைத்தவர்களின் இதயங்களில் தானுக மலர்ந்துவிடுகிறது.

நலிந்த மக்கள் மீது கொள்ளும் அனுதாபம், அவர்களின் தாழ்நிலை போக்குவதற்கான கடமை உணர்ச்சி, அவ்வழியே காரியமாற்ற உந்தும் உள்ளம், இவைகள் தாமே ஈகையின் ஆரம்பமாகும்.

ரம்ழானில் தோன்றும் இவ்வித எண்ணங்களால் மக்களின் உள்ளங்கள் நெகிழ்ந்து, மென்பட்டுள்ள நேரத்தில், தருமத்தின் திருநாள், ஈதுப் பெருநாள் வருவது எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பெருநாளின் ஆடம்பரத்தை நாம் இம்மாதக் கடைசியில் காணுவோம். (இன்ஷா அல்லாஹ்)

இந்த ஈதுப்பெருநாளை வானவர்களாகிய அமரர்களும் வெகு ஆனந்தத்தோடு கொண்டாடுகின்ருர்கள். இத்திருநாளில் இறைவன் தனது அமரர்களை அழைத்து' "ஓ, அமரர்களே! இந்த ரமழான் மாதத்தின் கடமைகளைப் பூர்த்தி செய்து முடித்த என் அடியார்களின் கூலி எங்கனமிருத்தல் வேண்டும்? ' என்று வினவுகின்ருன். அதுபோது அமரர்கள், "இறைவா அவர்களுக்கு உயர்ந்த சன்மானங்கள் அளிக்கப்படல் வேண்டும்'' என்று பதிலுரைக்கின்ருர்கள்.

"என் அடியார்கள் இம்மாதம் முழுவதும் நோன்பு வைத்தார்கள்; இராக்காலங்களில் விழித்து நபிலான (உபரி) வணக்கங்கள் புரிந்தார்கள்; திருமறை குர்ஆனை ஓதினுர்கள். இன்று (பெருநாளன்று) தங்களின் இல்லங்களையும் மறந்து என்னிடம் பிரார்த்தனை புரிவான் வேண்டி வெளியேறிட்டார்கள்; என்னுடைய உயர் தத்துவத்தின்மீது ஆணையாக, நான் இன்று அவர்களின் துஆக்களை ஒப்புக் கொண்டேன்; அவர்களின் குற்றங்களை மன்னித்து, தூய்மையானவர்களாக மாற்றிவிட்டேன்'' என்று அமரர்களிடத்தில் இறைவன் கூறுகின்ருன்.

தொகுப்பு :
மௌலவி எஸ் சதக்கத்துல்லா
ஜும்மா பள்ளிவாசல்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

அல்லாஹ்வின் பெயரால் நோன்பிருப்பதால், உடல்நலம் உரம் பெறுகிறது. மனம் நன்னெறியில் கட்டுப்பட்டு அமைகிறது. ஆத்மா தெளிவு பெற்று உயர்கிறது. இது மட்டுமல்லாமல், ஒரு மாதத்திற்காவது செல்வந்தரை எளியவரின் நிலையில் வைத்துவிடுகிறது. ரம்ழானின் நோன்பு,உண்டு கொழுப்பவர்கூட வறுமையையும், பசியையும் உணர வேண்டும் என்பதற்காக. ஏழைகளின் வயிற்றுக் கொடுமையை உணரும் போது, மெலியோர்மீது வலியோர் இரக்கம் கொள்ள ஏதுவுண்டு. வெறும் பொருத்தம் மட்டுமல்ல. சிந்தனையளவில் ரம்ழான் செய்வதை செயலளவில் காட்டும்படி முஸ்லிம்களைத் தூண்டுவதற்காகவே இப்பெருநாள் வருகிறது.

திருமறையருளிய இறைவனுக்கு நன்றி செலுத்த நோன்பென்ருல், அந்த நன்நோன்பை நிறைவேற்ற உதவிய ஒப்பற்றவனுக்கு வந்தனை செய்ய ஈதுல்பித்ர் உரியதாகும்.

ஈது என்ருல் திரும்புதல், திருப்புதல் எனப் பொருள்படும். வருடம் இருமுறை திரும்பத் திரும்ப வருவதால் இப்பெருநாளுக்கு 'ஈது'

## ரம்ழான் சுவை

அண்ணலாருக்கு நபிப் பட்டம் அருளப்பட்ட போதே நோன்பு கடமையாக்கப்படவில்லை அவர்கள் மக்காவைத் துறந்து மதீனுவில் குடியேறிய இரண்டாம் ஆண்டு ஆரம்பத்தில் (ஹிஜ்ரி இரண்டாம் வருடம்) தான் நோன்பும்—ஜக்காத்தும் முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டது.

* * *

'ரம்ழான்' என்ற அரபிப் பதத்திற்கு 'எரிக்குதல்' எனப்பொருள். ரம்ழான் மாதம் புனித நோன்பினை நோற்கும் பக்தர்களின் பாவப் பிணிகள் நோன்பின் மகிமையால் எரித்துக் கரிக்கப்படுகின்றன. தத்துவ நாமம் கொண்டது ரம்ழான்!

* * *

பதினெரு மாதங்கள் இடைவிடாது செயல்பட்டிருக்கும் உணவுக்குழாய் இரைப்பை, மலசல பாதை போன்ற உறுப்புகள் ஒரே மாதத்திற்கு நோற்கும் நோன்பின் டைந்து பின்வரும்

* * *

(5ம் பக்கம் பார்க்க)

## உளமுருக பிரார்த்தனை செய்தால் உலக வேறுபாடுகள் நீங்கும்

இஸ்லாமிய அடிப்படையில் உலக மக்கள் அனைவரும் பெருமானுர் முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்.

ஆரம்பத்தில் ஒரே குழுவினராக உலகில் வாழ்ந்து வந்த இந்த உம்மத், அவர்களின் எண்ணிக்கை பெருகியதும் - இப்புவியெங்கும் பரவியதன் காரணமாக- இனங்களாக, சமூகங்களாக, மொழிமாற்றத்துடன் பிளவுபட்டது.

இன, மொழி, நாடு, என்ற வகையில் மனித வர்க்கத்தில் ஏற்பட்டிருக்கும் பிளவுகளையும், தப்பெண்ணங்களையும் தவருனது என இஸ்லாம் கண்டிக்கின்றது,

பிறப்பின் வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் - இவைகள் அறிவீனத்தின் விளைவுகள் என சுட்டிக்காட்டும் இஸ்லாம், மனிதன் மனிதனுக்கு எந்த வகையிலும் அந்தஸ்தில் குறைவானவனல்ல என்றும் உறுதிப்படுத்துகின்றது.

மனித சமத்துவத்தை சகோதரத்துவத்தை உறுதிப்படுத்தும் முஸ்லிம்களாகிய நாம் இனங்களுக்கிடையில் ஏற்படும் பிளவுகளையும், பீடைகளையும், நீக்க நிவிர்த்தி செய்ய வேண்டி பிரார்த்திக்க வேண்டும்.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை உலக வஸ்துக்களைவிட இறை நம்பிக்கையில்தான் வெற்றிக்காக இருகையேந்தி இக்கால கட்டத்தில் இறைவனை வேண்டுவது மிக முக்கியமாகும்.

கலிங்கத்தை நோக்கி படையெடுத்து வந்த அசோகசக்கரவர்த்தியை ஒரு பௌத்த துறவியின் சொற்கள் - உள்ளத்தை உருகவைத்த சொற்கள்- அவன் வாழ்க்கையையே மாற்றி சரித்திரம்

அகுமது கரீம் அக்பர் ஜினு

நிச்சயம் உண்டு என்பதற்கு பல சரித்திர சான்றுகளும், மகான்களின் முன்மாதிரிகளும் உள்ளன

மனித உள்ளங்களை மாற்றுவது இறைவன் செயலென்ருல், இறைவனை அதற்காகத் தூண்டுவது மனித செயலாகும்.

ஆக, அழகான சின்னஞ் சிறிய இத்தீவில் வாழும் முஸ்லிம்களாகிய நாம் எம் நாட்டுக்காக, எம் நாட்டின் சுபீட்சத் படைக்க வைக்கவில்லையா?

ஒரு மனிதனின் சொற்களுக்கு ஒரு சக்கரவர்த்தியின் மனதை மாற்றும் சக்தியிலிருக்கிறது.

அப்படியானுல் தொழுதவர்களாக, - அழுதவர்களாக, - கண்களில் கண்ணீர் மல்க - இருதய சுத்தியுடன் முப்பது நாட்களை இறைபொருத்தத்

(5 ஆம் பக்கம் பார்க்க

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது
ஈ-துல்- fபித்ர் வாழ்த்துக்கள்
ஜெஸீமா
பிக்சர் பலஸ்
222, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
T'Phone: 24167
கிளை:
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T'Phone: 23127

றம்ழான் பண்டிகை
நன்னுளில்
மில்க்வைற் ஸ்தாபனத்தாரின்
நல் வாழ்த்துக்கள்




நுரைவளம் மிக்க மில்க்வைற் சோப் மேலுறைகள் 20 அனுப்பி
'ஏந்தல் நபியின் ஏவலர்கள்'
எனும் நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

ளாஸ் கவுஸ்ட்ரான்ஸ்போட்டர்ஸ்
ஸ்தாபனத்தினர் வாடிக்கையாளர்களுக்கு தங்களது
நோன்புப் பெருநாள்
நல் வாழ்த்துககளை
தெரிவித்துக் கொள்கிறுர்கள்
GLASS HOUSE
182, K.K.S. ROAD.
JAFFNA.
Tel: 22101
GLASS HOUSE TRANSPORTERS
63. DAM STREET,
COLOMBO 12. Tel: 34412
கொழும்பு 63, டாம் வீதியில் தங்களது
கொழும்பு—யாழ்ப்டாணம், யாழ்ப்பாணம்—கொழும்பு
சேவை நடைபெறுகின்றதென்பதையும் வாடிக்கையாளர்களின் கவனத்திற்குத் தருகின்றோம்.

றம்ழான்
நல் வாழ்த்துக்கள்!
சுத்தம்
சுவை
சுகம்
நிறைந்த
சைவ உணவிற்கும்
சிற்றுண்டி வகைகளுக்கும்
யாழ்நகரில்
ராஜ் மஹால்
கபே
53, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

'நபீஸா ஜுவலலர்ஸ்'
ஸ்தாபனத்தார்
புனித நோன்புப் பெருநாளைப் பெருமகிழ்வோடு கொண்டாடும்
முஸ்லிம் பெருமக்களுக்குத் தமது
வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் பேருவகை அடைகிறுர்கள்
நபீஸா ஜுவல்லர்ஸ்
171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
பழைய தங்க நகைகளை மிகக் கூடிய விலைக்கு விற்கவும் புதிய நகைகளை உடன் பெறவும் 22 Ct தங்க நகைகளை உத்தரவாதத்துடன் ஓடர் செய்து பெறவும், நவீன டிசைன்களில் நவ நாகரிக நங்கையர் விரும்பும் 'கால் சங்கிலிகளை'ப் பெறவும்
யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்
நபீஸா ஜுவல்லர்ஸ்
உரிமையாளர்; அபூஸாலிஹ் சி. நஸ்ஹீட்

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
ஈதுல் fபிதிர்
நல் வாழ்த்துக்கள்
PETTAH PALACE
163, NEW MARKET. JAFFNA.
T'Phone: 22428

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது
ரம்ஸான் நல் வாழ்த்துக்கள்
சியாஞஸ்
176, நவீன சந்தை.
யாழ்ப்பாணம்.

ரம்ழான் நல் வாழ்த்துக்கள்
றங்கா பூஜா பத்தி
உற்பத்தியாளர்கள்;
துளசி இண்டஸ்றீஸ்
அல்லின் வீதி, காரைநகர்.
விற்பனையாளர்கள்;
A.V.P. 119/6, K K S. ROAD. JAFFNA

786
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
ஈதுல் fபிதிர் நல் வாழ்த்துக்கள்
வட இலங்கையில் பிரசித்தி பெற்ற
தையல் நிலையம்
அமீர் ரெக்ஸ்
73, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
T'Phone: 23021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

தற்சோதனை செய்துபார். மனத்தைக் கூர்ந்து கவனித்து வா. அது படிப்படியாக மேலும் அமைதிபெறும். நீ உன்னுடைய குறைகளைக் கண்டுபிடிக்க முடியும்

– சுவாமி சிவானந்தா

உதயன்
உண்மை – அர்ப்பணம் – நடுநிலைமை
இல. 10 2ஆம் ஒழுங்கை
[illegible] வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி 24805
22073

# கிளிநொச்சி வருக

தாயின் கண் முன்னே, அவரை அணைத்திருந்த ஐந்து குழந்தைகளும் சதைத் துண்டங்களாகச் சிதறிய பரிதாப சம்பவம் நடந்திருக்கிறது.

கள்ளம் அறியாப் பிஞ்சு உள்ளங்கள் தமது வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்த வேளை, சரமாரியாக ஷெல் குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டு அச்சத்துடன் ஓடிப்போய் தாயைக் கட்டிப்பிடித்தனர்.

அவர்களுக்கு எமனாக வந்து கூரையைப் பிய்த்துக் கொண்டு நடுவே விழுந்தது ஷெல் குண்டு ஒன்று. பெற்ற தாய் தனது பிள்ளைகள் அந்தரித்துச் சாவதை நேரில் பார்க்க வேண்டியதாயிற்று.

கிளிநொச்சியில் நடந்த இந்தப் பயங்கரம், பரிதாபம் இதற்கு முன் கேட்டறியாத ஒரு கொடுமை.

அந்த ஐந்து குழந்தைகளையும் அரச படைகள், பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்திருக்கும். அதில் சந்தேகம் இல்லை.

அப்பாவிகளை இப்படிக் கொல்லும் அரசு, தான் அப்படிச் செய்யவில்லை என்று மனம் துணிந்து மறுத்தும் வருகிறது. பாதுகாப்புப் படைகளைப் போராளிகள் தாக்கினால், படைகள் அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வார்கள். இந்த விதியை அரசு நீண்டகாலமாகவே நடைமுறைப்படுத்தி வருகிறது.

தானுண்டு, தன் வேலையுண்டு என்று வாழும் மக்கள் தங்கள் வீடுகளில் பாதுகாப்பாக வாழும் அடிப்படை உரிமை கூட அரசாங்கத்தால் பறிக்கப்படுகிறது. தமிழ்ப்பகுதிகளில் தாராளமாக நடக்கும் அடிப்படை உரிமை மீறல்களை தட்டிக் கேட்க எவருமில்லை என்று அரசு நினைக்கிறது. சர்வதேச நிறுவனம் எதுவும் அது குறித்து முறையிட்டால் உடனே முழுப் பூசனிக்காயை சோற்றில் புதைத்து; விவகாரத்தைப் பூசி மெழுகுகிறது.

கிளிநொச்சியில் நடந்துவரும் சம்பவங்களில், அரச படைகளின் அக்கிரமத்தால் பல பொதுமக்கள் உயிரிழந்திருக்கின்றனர். மரணமானவர்களின் சடலங்களை அகற்றமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது சடலங்களை வீட்டுவளவுகளிலேயேபுதைக்கும் அவலம் ஏற்பட்டிருக்கிறது காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்று சிகிச்சை அளிக்க முடியாத தடைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

ஒரு போர்க் காலத்தில் இல்லாத அளவுக்கு கிளிநொச்சி மக்களுக்கு உயிர் உடைமைச் சேதங்களும், கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

போராளிகள் தங்களைத் தாக்குகிறார்கள் என்பதற்காகப் பொதுமக்களுக்கு அளவொண்ணாக் கஷ்டங்களை அரசு உண்டாக்கி இருக்கிறது. குண்டுவீச்சினால் அவர்களுக்கு உணவு தந்த விவசாயபூமிகளையும் பாழ்படுத்தி இருக்கிறது. அதன் மூலம் அவர்களை நிரந்தர பட்டினிக்குத் தள்ளியிருக்கிறது.

இந்தப் பாதிப்புகளும், அடிப்படை மனித உரிமை மீறல்களும் சரியாகக் கண்டறியப்பட்டு வெளி உலகுக்கு எடுத்து உரைக்கப்பட வேண்டும்.

கந்தளாய்க் குள உடைப்பு அனர்த்தத்தை நேரில் கண்டறிய செஞ்சிலுவைச் சங்க வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சென்றிருந்தார்கள். அதே போல கிளிநொச்சியில் அரசாங்கம் நடத்திய பிரளயத்தை - அனர்த்தத்தை நேரில் அறிவதற்கும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற மனித நலனில் நாட்டம் உள்ள நிறுவனங்கள் முன் வரவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும்

கிளிநொச்சிப் பிரளயமும் ஓர் அனர்த்தமே. இயற்கை அனர்த்தம் அல்ல; இலங்கை அரசாங்கம் செய்த செயற்கை அனர்த்தம்!

# புனித ரம்ழான்

இஸ்லாமியப் பெருமக்களின் புனித பெருநாள் ரம்ழான்.

இஸ்லாமிய மக்கள் புனித மாதமாகவே ரம்ழானை அனுஷ்டிக்கின்றனர்.

பாவப்பிணிகளைப் போக்கும் மாதம் ரம்ழான் என்று கொள்ளப்பட்டுள்ளது.

பாவங்களை எரித்து ஆன்மீக ஈடேற்றத்தை அடைவதற்காக ரம்ழான் மாதம் முழுவதும் கடுமையாக நோன்பு நோற்பதைத் தவிர்க்க முடியாத கடமையாகக் கொண்டவர்கள் இஸ்லாமிய மக்கள்.

இப்புனித மாதத்தில்தான் சாத்தான்கள் விலங்கிடப்பட்டு, நரகக் கதவுகள் தாளிடப்பட்டு, சுவர்க்கக் கதவுகள் திறக்கப்படுகின்றன. இது இஸ்லாமிய மார்க்க அறிஞர்களின் கருத்து.

ரம்ழான் திங்களில் முதல் பத்து நாட்கள் இறையருளை எடுத்துக் காட்டும் 'ரஹ்மத்' ஆகவும், இரண்டாவது பத்து நாட்கள் மன்னிப்பைப் பிரதிபலிக்கும் 'மஃபிரத்' ஆகவும், கடைசி பத்து நாட்கள் நரகத்தில் இருந்து விடுதலை பெறுவதற்குமாக அமைகின்றன.

புனித ரம்ழானுக்கு இவற்றை எல்லாம் விட இன்னொரு சிறப்பும் உண்டு.

மக்களுக்கு வழிகாட்ட வந்த மாமறையாம் திருகுர்ஆன் இம்மாதத்தில்தான் அருளப்பட்டது.

ரம்ழானின் சிறப்புக்களை மக்கள் உணர்வார்களாயின் ஆண்டு முழுவதும் ரமழானாகவே இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவர் என்று நபிநாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளது பொருத்தமானதே.

இந்த புனித திருநாளில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் இஸ்லாமிய பெருமக்கள் தற்போது அனுபவித்து வரும் இன்னல்கள், துன்பங்கள் நீங்கி சுபீட்சத்துடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க இறைஞ்சுகின்றோம்.

---

முன்னாள் ஐ.நா. செயலாளர்

# வால்ட் ஹெய்ம் ஆஸ்திரியாவின் புதிய ஜனாதிபதி

## குற்றச்சாட்டுக்கு மத்தியில் வெற்றி

வியன்னா, ஜூன் 9

ஐ. நா முன்னாள் பொதுச் செயலாளர் குர்ட் வால்ட் ஹெய்ம் ஆஸ்திரியாவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த இறுதி வாக்கெடுப்பில் திரு. வால்ட் ஹெய்முக்கு 54 சதவீத வாக்குகள் கிடைத்தன.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜெர்மன் சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லரின் நாஸிப் படையில் இராணுவ அதிகாரியாகப் பதவியாற்றினார் என்ற குற்றச்சாட்டுக்களின் மத்தியிலும் திரு. வால்ட்ஹெய்ம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திரு. வால்ட் ஹெய்ம் தான் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடப் போவதாக அறிவித்ததும் அவர் மீது யூத எதிர்ப்புக்குக் குற்றச்சாட்டுக்களை உலக யூதர் காங்கிரஸ் சமர்ப்பித்தது.

ஜேர்மன் இராணுவ அதிகாரியாகப் பணியாற்றிய சமயம் யூதர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் திரு. வால்ட் ஹெய்ம் ஈடுபட்டார் என்பதற்குரிய தஸ்தாவேஜுகளை உலக யூதர் காங்கிரஸ் சமர்ப்பித்தது.

ஆஸ்திரியாவின் புதிய ஜனாதிபதியாக அடுத்த ஆறு ஆண்டுகள் பணியாற்றுவதற்குத் தெரிவான திரு வால்ட்ஹெய்ம் செய்தியாளர்களிடம் கடந்த ஞாயிறு தெரிவிக்கையில்,

"ஆஸ்திரியத்தலைவராக உலக நாடுகளுக்கு விஜயம் செய்கையில் யூதர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் இருக்கமாட்டா" — என்று நம்பிக்கை தெரிவித்தார்.

யூதர்களின் எதிர்ப்பு காலக்கிரமத்தில் அடங்கிவிடும் என்றும் அவர் சொன்னார்.

(இ-எ)

## அக்கியூனோவின் 100 நாள் பூர்த்தி குறித்து லண்டன் கார்டியன்

மணிலா, ஜூன்.9

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதியாகி நூறு நாட்களை வெற்றியுடன் நிறைவேற்றிய திருமதி கொரோஷன் அக்கியூனோவிற்கு வெளிநாட்டவர்களின் நல்வாழ்த்துக்கள் குவிந்துள்ளன.

இவ்வாறு லண்டன் கார்டியன் பத்திரிகை தெரிவித்தது.

எனினும் வெளிநாட்டவர்களின் பண முதலீடுகளோ பண உதவிகளோ பிலிப்பீன்ஸ் தேசத்துக்கு கிடைப்பதாக இல்லை.

அக்கியூனோ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபோது திறைசேரி பெரும்பாலும் காலியாகவே இருந்தது.

அத்துடன் 2600கோடி டொலர் பணம் வெளிநாட்டுக் கடனாகவும் இருந்தது.

இவற்றிற்கு நிவாரணம் அளிக்க அக்கியூனோ அறைகூவல் விடுத்தபோதும் எவருமே அதைச் செவி சாய்த்ததாகத் தெரியவில்லை.

இவ்வாறு அப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (இ-ஒ)

---

## அமெரிக்க செனட்டில் பரீட்சார்த்த நேரடி தொலைக்காட்சிச் சேவை

வாஷிங்டன், ஜூன் 9

அமெரிக்க மேல்சபையில் பரீட்சார்த்த நேரடித் தொலைக்காட்சிச் சேவைகள் ஆரம்பமாகியுள்ளன.

அமெரிக்க செனட் சபையில் ஆறு தொலைக்காட்சி கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. எனினும் ஆறும் ஒரே சமயத்தில் இயங்க மாட்டா.

தலைமை வகிப்பவரதும் பேச்சாளரதும்முகம் மட்டும்தான் தொலைக்காட்சியில் தெரியும்.

ஏனையவற்றை படம் பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

(இ-ஒ)

## 110 வயதில் தவறு புலனானது

டோக்கியோ, ஜூன்.9

ஜப்பான் நாட்டின் ஆக வயது கூடியவர் என கணிக்கப்பட்ட 110 வயதுடைய ஜோஸி கமாடா என்பவரது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை தற்செயலாக ஆராய்ந்த அதிகாரிகள் 10 வருடங்கள் தவறுதலாக கூடக்கணக்கிட்டிருப்பதை கண்டுபிடித்தனர்- ஜோஸியின் தற்போதைய வயது நூறுதான். (உ-ஒ)

வெளி உலகில்

## புதுடில்லியில் 'எய்ட்ஸ்' தடுப்பு கருத்தரங்கு

புதுடில்லி, ஜூன் 9

எயட்ஸ் தடுப்பு கருத்தரங்கு ஒன்று புதுடில்லியில் ஆரம்பமானது

இந்த இரண்டு நாள் கருத்தரங்கை மத்திய சுகாதார அமைச்சர் திருமதி கித்வாய் தொடக்கி வைத்தார்.

(இ-எ)

வரிப்பாக்கி செலுத்தாத

## திரையுலகப் பிரமுகர் வீடுகள் சோதனை

புதுடில்லி ஜூன் 9

வருமானவரி அதிகாரிகள் திரையுலகப் பிரமுகர்கள் பலரின் இல்லங்களை திடீர் முற்றுகையிட்டு சுமார் 71 லட்சம் ரூபாவை பறிமுதல் செய்தனர்.

இவர்களில் அனேகர் ஹிந்தித் திரையுலகைச் சார்ந்தவர்கள், தமிழ்த் திரையுலக பின்னணி பாடகர் திரு பி. பி. ஸ்ரீநிவாஸின் இல்லமும் சோதனையிடப்பட்டு சுமார் 70,000 ரூபா பறிமுதல் செய்யப்பட்டது.

தவிர சிவாஜிகணேசன்' என். ரி. ராமராவ், கே எஸ். கோபாலக்கிருஷ்ணன், ஜெயபிரதா, விஜய் ஆனந், எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ் பி. பால சுப்பிரமணியம் போன்றவர்களும் வரிப்பாக்கியாக தலா ஒருலட்சத்துக்கும் மேல் செலுத்த வேண்டியுள்ளது.

1983 ஆம் ஆண்டுக்கு முந்திய வரிப்பாக்கி இதுவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது

(இ-ஒ)

அரச திருமணத்துக்கு

## வெளிநாட்டு தலைவர்களுக்கு அழைப்பு இல்லை

லண்டன், ஜூன், 9

அடுத்த மாதம் 23ஆம் திகதி நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் மகாராணியின் 2ஆவது மகனான அன்றா—சாரா பேகுஸன் திருமணத்திற்கு வெளிநாட்டுத் தலைவர்கள் அழைக்கப்படமாட்டார்கள் என்று அரசமாளிகை அறிவித்துள்ளது.

1910ஆம் ஆண்டிலிருந்து சகல அரச திருமணங்களுக்கும் உபயோகப்படும் கண்ணாடியிலான குதிரை வண்டியே இம்முறையும் பயன்படுத்தப்படும்.

லண்டன் நகர வீதிகளில் அன்றா—சரா படம் பொறித்த கோப்பைகள் — பீங்கான்கள், ஷேர்ட்டுகள், தபாலட்டைகள் மற்றும் பல பொருள்கள் இப்பொழுதிருந்தே அமோக விற்பனையாவதாக பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

1981ஆம் ஆண்டு நடைபெற்ற சார்ள்ஸ்–டயானா திருமணத்திற்கும் இவ்வாறு பல ஆடம்பரப் பொருள்கள் விற்பனையாகின.

### அறுவர் கொலை

சண்டிகார், ஜூன் 9

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியத் தீவிரவாதிகள் சுட்டதில் 6 குடிமக்கள் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

(இ-எ)

---

## பிரதேச கடலைவளத்தை-

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இது ஒரு தனியார் நிறுவனம் அல்ல. மக்கள் நிறுவனம். மக்கள் பங்கு பெறக்கூடிய நிறுவனம். பத்து ரூபா சாதாரண பங்குகள் (200,000) பொதுமக்களுக்கு விடப்படவுள்ளன. ஒருவர் ஆகக் குறைந்தது நூறு பங்குகளை வாங்க முடியும். எமது நாட்டில் அல்லது வெளிநாடுகளில் வசிப்போரும் பங்குகளை விலைக்கு வாங்க முடியும்.

கடற்றொழிலாளர் நலன், இலாபம் திரும்ப முதலீடு செய்யப்படுதல், கடற்றொழில் நுட்ப வளர்ச்சி, மக்கள் கம்பனி உருவாக்கம் ஊக்குவிக்கப்படல், பொதுவான சமுதாய மறுமலர்ச்சி ஆகியவை இவற்றின் சிறப்பு அம்சங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சாதி அடிப்படையில் தொழில் செய்வது என்ற நிலையை மாற்றி மீனவர்கள் மத்தியில் சிக்கன வாழ்வு, சேமிப்பு சமநிலை, நல்ல உணவுப் பழக்கங்களை விருத்தி செய்வதுமூலம் சமுதாய மறுமலர்ச்சி காணமுடியும்.

பொன்னாலையில் முதற் கட்ட வேலைகள் ஆரம்பமானாலும், பின்னர் மாதகல், பருத்தித்துறை யாழ்ப்பாணம், முல்லைத் தீவு ஆகிய பிரதேசங்களுக்கு இவ்வேலைத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது. 1987ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஏற்றுமதிக்குத் தயாராகும் நிலை உருவாகும் என்ற நம்பிக்கை உண்டு.

இலாபம் திரும்ப முதலீடு செய்யப்படுவதும் இத்திட்டத்தின்ஓரம்சம் முதலீட்டினால் பெறப்படும் லாபத்தைப் பங்குதாரர்களின் அனுமதியுடன் வேறு தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதில் முதலீடு செய்வதை இது குறிக்கும். இது முழுக்க முழுக்க கம்பனிச். சட்டத்தின்கீழ் இயங்குவதால் அதன் உறுதிநிலை தெளிவாகிறது.

இத்தகைய வேலைத் திட்டத்தினால் நமது மக்களுக்குத் தொழில் வாய்ப்புகள் பெருகுவதுடன் மீனவர்களிடையே நவீன மீன்பிடி உத்திகள் பிரபல்யம் அடைவதும், நமது பிரதேச கடல்வளம் பாரிய அளவில் பயன்படுத்தப்படுவதும், எமது உணவுத் தேவை பூர்த்தி செய்யப்படுவதும், இது தொடர்பான சிறுகைத்தொழில்கள் தோன்றுவதும், பொருளாதார அபிவிருத்தி மலர்வதும், மக்கள் வாழ்வு மேம்பாடு உறுவதும் இச் செயற் [illegible] களாம்.

★

## உளமுருக..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திற்காக உண்ணாமல், பருகாமல் பகற்காலங்களில் நோன்பிருந்து இரவில் அதிகமதிகம் வணக்கங்களில் ஈடுபட்ட ஒரு முஸ்லிம் இந்த நோன்புப் பெருநாளன்று 'இறைவா! உனக்காக நோன்பு நோற்றேன்; உன் பொருத்தத்திற்காக வணக்கங்கள் புரிந்தேன்; உனது உதவியை வேண்டி நிற்கிறேன்; எமது நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்து! ஒற்றுமையை ஏற்படுத்து!! என்று ஒரு நிமிட நேரம் உளமுருக பிரார்த்தனை செய்தால் நிச்சயமாக சத்தியமாக அது நாட்டில் ஒரு பிரமாண்டமான மாற்றத்தை ஏற்படுத்தாதா.

### பொய்யாமொழி



குறள்:

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற புன்மையில் காட்சி யவர்.

பொருள்:

ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத அறிவை உடையவர், யாம் வறுமை அடைந்தோம், என்று எண்ணியும் பிறர் பொருளை விரும்பார்.

# வல்வெட்டித்துறையில் ஹெலி, ஷெல் தாக்குதல்

## பெண் மரணம், கர்ப்பிணி காயம்

பருத்தித்துறை, ஜூன்10

ஹெலிக்கொப்டர் தரை இறக்க முடியாதபடி போராளிகள் ரொக்கட் லோஞ்சரால் தாக்கினார்கள். உயரப்பறந்த ஹெலிக்கொப்டர் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளை நோக்கி துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்ததனையடுத்து இராணுவ முகாம் பகுதியிலிருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த சனிக்கிழமை வல்வெட்டித்துறையில் இக்சம்பவம் நடந்தது.

ஹெலிக்கொப்டர் மேலிருந்து துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்த போது குளித்துக்கொண்டிருந்த 18 வயது இளம் பெண் ஒருவர் படுகாயமுற்றார். அவசர சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துவரும் வழியில் அவர் மரணமானார்

இராணுவ முகாம் பகுதியிலிருந்து வந்த ஷெல் தாக்குதலின்போது [illegible] ஆறுமாதக் கர்ப்பிணி [illegible] இராச பரமேஸ்வரி தேவசிகாமணி (வயது 26) என்பவர் படுகாயமுற்றார். இவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சனிக்கிழமை மாலை நடைபெற்றமற்றுமொரு ஷெல் தாக்குதலின் போது வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி சரோஜினிதேவி ஆறுமுகம் (வயது 42) என்பவர் பலத்த காயங்களுக்குள்ளானார்.

இவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு அவசர சத்திர சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ் அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

(உ-109)

### அலங்கார உற்சவம்

சாவகச்சேரி, ஜூன் 10

சரசாலை இலந்தைத்திடல் அருள் மிகு ஸ்ரீவீர மாகாளி அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவங்கள் இம்மாதம் 16 ம் திகதியன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்துதினங்கள் நடைபெறவிருக்கின்றன.

25 ம் திகதி மணவாளக்கோல விழாவுடன் நிறைவேறும் அன்றைய தினம் 1008 சங்காபிஷேகமும் அன்னதானமும் இடம்பெறும். (உ-31)

### ரம்ழான் கவை

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களில் நன்கு செயல்படத்தக்க வகையில் சீரடைகின்றன. 'பத்தியம் பரம ஔஷதம்' என்பது முதுமொழியல்லவா?

* ... *

'நோன்பாளிக்கு தண்ணீர் அருந்தச் செய்தவருக்கு மறுமை தினதில் என்னுடைய தீர்த்தத்திலிருந்து இறைவன் நீரளிப்பான் அவர் சுவனத்தை அடையும்வரை தாகிக்கமாட்டார்' என்கிறார்கள் பெருமானார்

### வாசகர் திருமுகம்

## மன்னாரில் சீரற்ற மின் விநியோகம்

மன்னார் நகர கடைவீதி தவிர்ந்த ஏனைய பகுதிகளான பள்ளிமுனை, உப்புக்குளம், சின்னக்கடை, மூர் வீதி, பனங்கட்டிக்கொட்டு, ஆஸ்பத்திரி வீதி, சாவற்கட்டு ஆகிய பகுதிகள் சீரற்ற மின் விநியோகம் காரணமாக இருளில் மூழ்கியுள்ளன.

இதுபற்றி மின்சார சபையின் ஊழியர்களிடம் முறையிடு செய்தால் அதிகாரிகளை வினவுமாறு விடையளிக்கின்றார்கள். அதிகாரிகளிடம் முறையிட்டால் இலங்கை மின்சாரசபை மீது பழியைச் சுமத்துகின்றார்கள்.

இதுபற்றி மூர் வீதி பொது மக்கள் மன்னார் மேலதிக அரசாங்க அதிபரிடம் முறையிட்டதன் பலனாக ஓரிரு தினங்கள் மாத்திரம் மின்சாரம் இடையிடையே திருத்தப்பட்டு விநியோகிக்கப்பட்டது. அதன் பின்னர் முற்றாகவே மேற்குறிப்பிட்ட பகுதிகள் மீண்டும் பழைய நிலையில் உள்ளன. இயந்திரக் கோளாறே இதற்குக் காரணமெனத்விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சுன்னாகத்திலிருந்து தொழில் நுட்பவியலாளர்கள் வந்து இயந்திரக் கோளாறை சரி செய்தும் மீண்டும் பழைய பல்லவியே.

மன்னார் நகர மக்களுக்கு என்றுதான் சீரான மின்விநியோகம் கிடைக்குமோ?

எம். எ. ஹனிபா
மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ramzan Greetings
from
**Fancy House**
68, Grand Bazaar, JAFFNA
T'Phone: 22046

# உதயன்

10-06 1986 செவ்வாய்க்கிழமை

நோன்புப் பெருநாள்
வாழ்த்துக்கள்
பென்ஸி ஹவுஸ்
68 பெரிய கடை - யாழ்ப்பாணம்

# தீவுப்பகுதி பாடசாலைகள் 18 இல் மீண்டும் ஆரம்பம்

## எந்த ஓர் ஆசிரியருக்கும் இடமாற்றம் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 10
தீவுப் பகுதியிலுள்ள சகல பாடசாலைகளும் எதிர்வரும் 18ஆம் திகதியுடன் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இராசுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

18ஆம் திகதி முதல் ஆசிரியர்கள் அனைவரும் கட்டாயம் சேவைக்குத் திரும்ப வேண்டும் என்றும் தவறுவோரின் லீவுகள் அவர்களின் சொந்த லீவு நாட்களாகவே கணிக்கப்படும் என்றும் பணிப்பாளர் கூறினார்.

மாணவர்களின் நலன் கருதியே தாம் இந்நடவடிக்கையை எடுத்ததாகவும் இடமாற்றம் கோரும் எந்த ஒரு ஆசிரியருக்கும் இடமாற்றம் வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் கூறினார்.

இயங்க முடியாதபாடசாலைகள் வேறு கட்டடங்களில் இயங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஊர்காவற்றுறை கல்வி வட்டாரத்திற்கு 30புதிய ஆசிரிய நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

### அவர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
முகாமையை அண்டிய பகுதிகளில் வைத்து அடகு நகைகளை மீட்டுச் செல்வோரின் வாகனங்களின் மீது வானத் தாக்குதல்கள் தவறுதலாக இடம் பெறுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மக்கள் வங்கி அதிகாரி ஒருவரிடம் பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் இப்படித் தெரிவித்தார் என அறியவந்தது.

அடகு நகை மீட்டுவந்தோர்மீது ஹெலித்தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து வினவப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி ஹெலித்தாக்குதல் இராணுவ முகாமிலிருந்து ஆயிரம் மீற்றர் வலயத்துக்கு அப்பால் நடைபெற்றது என்றும் அந்த அதிகாரி சொன்னராம்.

இதேவேளை மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்து யாழ். மக்கள் வங்கி நிர்வாகம் அதன் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்க இருப்பதாகத்தெரியவருகிறது. (உ-6)

## றம்ழானுக்கு விரிவுரைகள் இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
றம்ழான் பெருநாளான நேற்றுயாழ்பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்கள் சமய அனுஷ்டானங்களை நடத்துவதற்கு ஏதுவாக சகல பீடங்களிற்கான விரிவுரைகளையும் பல்கலைக் கழக நிர்வாகம் காலை 10 மணியுடன் இடை நிறுத்தியது.

நேற்று அரசாங்க பொது விடுமுறையாக இல்லாது இருந்தும் யாழ் பல்கலைக் கழக முஸ்லிம் மஜ்லிஸின் வேண்டுகோளை ஏற்று பல்கலைக் கழக நிர்வாகம் விரிவுரைகளை இடை நிறுத்தியதற்காக பல்கலைக் கழக முஸ்லிம் மஜ்லிஸ், பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு தெரிவித்துள்ளது.

இத்தகவலை மஜ்லிஸ் தலைவர் ஜனாப். செ. நா. அகமட் அருஸ் தெரிவித்தார். (இ-எ)

## வேல் ஆனந்தனின் என்னதான் முடிவு?

யாழ்ப்பாணம் ஜூன் 10
கலைஞர் வேல்ஆனந்தனின் என்னதான் முடிவு? நாட்டியம் இன்று மாலை 2. 30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

நடிகமணி வி.வி.வைரமுத்து தலைமையில்நடைபெறும் இந்த நிகழ்ச்சி கலைஞர் வேல்ஆனந்தனின் அமையம் தயாரித்து அளிக்கும் 746 ஆவது ஆடரங்காக அமையும்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வர். ரெலிகுளோப் அதிபர் திரு. ம. சிவராசா மங்கள விளக்கு ஏற்றுவார். யாழ் மறை மாவட்டப் பேராயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆசியுரை வழங்குவர்.

இன்றைய நிகழ்ச்சி நாட்டிய அமையத்தின் அங்கத்தவர்களுக்கும். அமைப்பாளர்களுக்கும் மட்டுமே நடைபெறும்.

நாளையும் மறுதினமும் பொது மக்களுக்காக நிகழ்ச்சி நடைபெறும். (இ-ஒ)

## அச்சுவேலியில் டானியல் அஞ்சலிக் கூட்டம்

பலாலி, ஜூன் 10
இன்று செவ்வாய்க்கிழமை அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் 'டானியல்' அஞ்சலிக் கூட்டம் நடைபெறுகிறது

பிற்பகல் 2 மணி அளவில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு டாக்டர் நந்தி' தலைமை வகிப்பார்.

திரு. சி. பற்குணம் ஜனாப். இக்பால், திரு. தெணியான், திரு. ந. இராசேந்திரன், திரு. க. இராசதுரை உட்படப் பலர் உரையாற்றுவர்.

### கண்டலங்கிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஆறுமுகம், திரு. பி எஸ். பாலகனகரட்ணம், திரு. சி. மகாலிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

அரச லிகிதர் சேவைச் சங்கம் சார்பில் என். தவராஜா உரைநிகழ்த்தினார்.

செயலக ஊழியர்கள் தங்கள் ஒரு நாள் சம்பளப்பணத்தை மறைந்த அருள்நாதனின் குடும்பத்திற்கு கொடுக்க வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்ட முடிவில் ஊழியர்களினால் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (உ-)

## 45ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28-04-1964 — மறைவு 27-04-1986

**செல்வன் ஆசிர்வாதம் விஜயகுமார்**

இறப்பவர் இன்றே என்றோ
இறப்பது உண்மை என்றே
சிறப்பென வாழ்ந்து காட்டி
மறைந்தானே பத்தன் விஜி.

எமையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில்கொண்டு விண்ணுலகம் சென்றனையோ நாம் துயருறும் நாட்கள் மாதங்களாகி மாதங்கள் ஆண்டுகளாகினாலும் எமது துயர் ஒருபோதும் மாருது உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்

ஆசிர்வாதம், செல்லம்மா, அருந்தவராசா(தம்பு) சந்திரா, சாந்தகுமாரி, பாலசந்திரன் (ஜேர்மன்) சந்திரசேன, பிரதீப்குமார், வலன்ரைன், அமிர்தரஞ்சன், (K.C.W.) டல்றின் றஞ்சித், ரேகா, பபிசங்கர், நிலோஜா, மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, அன்ரி மற்றும் சுற்றத்தார், உறவினர்

## ஆனையிறவு முகாமில் பார்சல்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
ஆனையிறவு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவெளிநாட்டுப் பார்சல்கள் நேற்று அங்கு சென்றவர்களிடம் வழங்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை வெளிநாட்டுப் பொருள்களுடன் வந்த லொறி ஒன்று ஆனையிறவு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததும்-

பொருள்களுக்குரியவர்கள் நேரடியாக முகாமிற்கு வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் ஏற்கனவே செய்தி வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதனையடுத்து நேற்று சம்பந்தப்பட்ட லொறி மூலம் பத்துப்பேர் ஆனையிறவு இராணுவ முகாமிற்கு தமது பொருள்களைப் பெறச்சென்றனர்.

அதன் பின்னர் தகுந்த அடையாளங்கள் சமர்ப்பிக்கப்பட்ட சகல பொருள்களும் உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## சேக்கிழார் விழா 2ஆம் நாள் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் ஜூன்10
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடத்தும் சேக்கிழார் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி இன்று(10.6 86) மாலை நடைபெறுகின்றது

க. சிவபாதசுந்தரனார் அரங்கில் நடைபெறும், இன்றைய நிகழ்ச்சியில் பிற்பகல் 3 மணிக்கு சேக்கிழார் புராணபடனம் இடம்பெறும்.

அதைத் தொடர்ந்து 'வாக்கினுற்சொல்லவல்ல பிரான்' - என்ற தலைப்பில் திரு. க. சொக்கலிங்கம் எம் ஏ சிறப்புரை நிகழ்த்துவார். (இ-எ)

### மறைந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கலைக் கல்லூரியைச் சென்றடைந்தது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் பாடசாலை மாணவர் முன்றலில் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது

மறைந்த முதல் மாணவப் போராளியான சிவகுமாரனுக்கும் அவர் வழி வந்த மற்றைய மறைந்த போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக, இராணுவ சல்யூட்டுடன் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

"விடுதலைச் சுடரினிலே விடியலுக்கோர் செய்தி" என்ற தலைப்பிலான ரெலோவின் அறிக்கையும் வாசிக்கப்பட்டது. (உ-5)

## கிளிநொச்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று நடந்ததால் ஷெல் தாக்குதல், குண்டுத் தாக்குதல்களால் காயமடைந்த பொதுமக்களில் பெரும்பாலானோர் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர்.

காயமடைந்த பல பொதுமக்களுக்கு உடனடியாக சிகிச்சைஅளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்ததால் காயப்பட்டரணங்கள் மணக்கத் தொடங்கியுள்ளன. நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டவர்கள் அதே வகையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

தாக்குதல்களுக்கு ஆளானவுடன் இங்கு கொண்டுவர முடியாத நிலையில் இருந்த இருவர் நேற்று முன்தினம் மரணமானதாகவும் சொல்லப்படுகிறது.

காயமடைந்த பொது மக்களுக்கு உடனடியாக மருந்துகட்டுவதற்கு தனியார் டிஸ்பென்ஸறிகளில்கூட மருந்து வகைகளோ ஊசிகளோ இல்லை என்றும்அவற்றுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது. எனினும் போராளிகள் சிலர் பெருமுயற்சிஎடுத்து தனியார் வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை விநியோகித்து வருகின்றனர். (உ-10)

## நாட்டிய கருத்தரங்கு

நல்லூர் ஜூன் 10
'நாட்டிய நாடகம்' பற்றிய கருத்தரங்கு ஒன்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவு ஆதரவில் நடைபெற உள்ளது

நாளை 11 - 06 - 86 புதன்கிழமை நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் கவிமாமணி திரு. என். வீரமணி ஐயர் கலந்து கொள்கிறார்.

இதில் நாட்டிய நாடகம் பற்றிய விளக்கவுரையும், சாதனையும் இடம் பெறவுள்ளன. (இ-10)

### வயாவிளா

(1ம் பக்கத் தொடர்ச்சி)
யாகக் கட்டுவன் நோக்கி சில தூரங்கள் வந்தனர்.

எவ்வித எதிர்த் தாக்குதலும் இன்றி சிப்பாய்கள் திரும்பிச் சென்றனர்.

ஆனாலும் ஹெலிக்கொப்டர் குரும்பசிட்டி கட்டுவன் பக்கம் அவர்களுக்குப் பாதுகாப்பளித்து சுட்டது.

இதனால் தெல்லிப்பளை, கட்டுவன், குரும்பசிட்டி, புன்னாலைக்கட்டுவன் ஏழாலைப் பகுதிப் பாடசாலைகள் திடீர் திடீரென மூடப்பட்டன. மக்கள் பதற்றமடைந்து காணப்பட்டனர்.

ஞாயிறு இரவு 1மணிக்குப் பின்னர் வயாவிளான் இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டபடி இருந்தன. இதனை அடுத்தே நேற்று அதிகாலை 5 'ஷெல்' குண்டுகள் ஏவப்பட்டன. (இ-119)

### ராஜீவிட..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
பேசிக் கொண்டனர்.

திரு. டிக்ஸிற் மூலம் திரு. ஜெயவர்த்தன இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதம் இந்திய வெளியுறவு அதிகாரிகளினால் ஊன்றி ஆராயப்பட்ட பின்னரே இந்தியப் பிரதமரின் பதில் அனுப்பப்பட்டுள்ளது.

பேச்சுக்களுக்கான அமைதிச் சூழ்நிலையை உருவாக்க வன்செயல்களை நிறுத்தும்படி தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துங்கள் என்றும் பேச்சுக்களை நடத்த ஒன்றுபட்ட தமிழர் குழுக்களை அனுப்புங்கள் என்றும் திரு. ஜெயவர்த்தனவின் நீண்ட கடிதத்தில் கூறப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

### கலவான

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தற்பொழுது திரு. குணசேகராவைக் கம்யூனிஸ்ட் கட்சி நியமித்துள்ளது.

கட்சியின் அரசியல் குழுவில் (பொலிற்பீரோவில்) திரு. குணசேகராவும் ஒருவர்.

நாடாளுமன்றம் ஜூன் 19 ஆம் திகதி மீண்டும் கூடும்போது, திரு. குணசேகரா பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். (இ-எ)

## விளையாட்டரங்கு

### 15 வயது கிரிக்கெட்

## கொக்குவில் இந்துவுக்கு கிடைத்த அமோகவெற்றி!

### நிலைகுலைந்தது மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ் மத்திய கல்லூரி அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஒரு இன்னிங்சால் வெற்றி பெற்றது.

15 வயதுக்குட்பட்ட பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கிடையேயான சுற்றுப் போட்டியின் ஓர் அங்கமாகவே இப் போட்டி நடைபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி 61 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

எஸ். ஸ்ரீ சங்கர் 22 ஓட்டங்களைப் பெற்றார்

ஏ. ஐங்கரலிங்கம், பி. செந்தில்வேல் நாதன், ஆர். பத்மநாதன் ஆகியோர் முறையே 5, 1, 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதற்கு பதிலளித்து ஆடிய கொக்குவில் இந்து அணி 163 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது.

கே சுதாகரன், பி. செந்தில் நாதன், வி. வசீகரன் ஆகியோர் முறையே 33, 29, 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

எம். எஸ். எம். ரஞ்சித் 4 விக்கெட்டுக்களையும் எஸ். ராஜஸ்காந்தன் 3 விக்கெட்டுக்களையும், எம். சுரேந்திரஜித் எஸ். ஸ்ரீ சங்கர், என். செந்தூரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 102 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் மத்திய கல்லூரி அணி தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி 80 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால் இன்னிங்ஸ் தோல்வியைத் தழுவியது.

பிரபாகரன், என்.செந்தூரன் ஆகியோர் முறையே 22, 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

பி. செந்தில்வேல் நாதன் 4 விக்கெட்டுக்களையும் ஆர் பத்மநாதன், பி. நவீந்திரன், வி. சந்தியபாலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக எஸ். உமாகாந்தன், எஸ். விச்னபாலன் ஆகியோர் கடமையாற்றினர் (இ-7)

## யாழ் இந்து அணிக்கு முதல் இன்னிங்ஸ்வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 10
15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் விறுவிறுப்பான ஆட்டமொன்றில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை யாழ் இந்துக் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸால் வென்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்துக்கல்லூரி அணி அபாரமாக ஆடி, 6 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது.

பி. பிரதீபன் விளாசியடித்து 1 சிக்சர் 5 பவுண்டரிகள் அடங்கிய 43 ஓட்டங்களையும், என். ஜெயராஜா நிதானமாக ஆடி 61 ஓட்டங்களையும் ரி. பிரபாகரன் பந்துகளை சிதறடித்து 7 பவுண்டரிகள் அடங்கிய 50 ஓட்டங்களையும், எஸ் பிரதாபன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஏ ஜே. ஜஸ்ரின் சிறப்பாக பந்து வீசி 3 விக்கெட்டுக்களையும் சி. கே. ஆனந்தகுமார் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ்கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது.

ரி ஜே தயாளன் அபாரமாக ஆடி ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் வி. சுகுமார் 4 விக்கெட்டுக்களையும், பி. துவாரகன் 3 விக்கெட்டுக்களையும் எஸ். வரதன், கே. பகிரதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 99 ஓட்டங்கள் இருந்ததால் பற்றிக்ஸ் கல்லூரி அணியை, யாழ் இந்துக் கல்லூரி அணி, மீண்டும் துடுப்பெடுத்தாட அழைத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் அணி இறுதியாக ஒதுக்கப்பட்ட 9 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 19 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஏ ஜே ஜஸ்ரின் ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்களைப் பெற்றார்.

ரி. பிரபாகரன் 2 விக்கெட்டுக்களையும் பி.துவாரகன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி இடம் பெற்றது. (இ-7)

### காரைநகர் மெய்கண்டான் இல்லப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 10
காரைநகர் மெய்கண்டான் வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை 11 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்

இப்போட்டிகளுக்கு திரு. கி.சிவமணி தலைமை வகிப்பார். வட்டு. வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. சபாபதிப்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நீலம், பச்சை, சிவப்பு ஆகிய நிறங்களை முறையே தமது வர்ணங்களாகக் கொண்ட காந்தி இல்லம், உமாபதி இல்லம், பாரதி இல்லம் ஆகிய இல்லங்கள் போட்டியிலீடுபடும் (இ-ஒ)

## கட்டட வேலைகளுக்கு ஒரு லட்சம் ரூபா நிதி

வட்டுக்கோட்டை, ஜூன் 10
அளவெட்டி தெற்குப் பகுதியில் கால்நடை விஸ்தரிப்பு நிலையமும் உரக் களஞ்சியமும் அமைப்பதற்கென யாழ் கமநல சேவைத் திணைக்களம் ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் இப்பகுதியில் கால் நடை விஸ்தரிப்பு நிலையம், உரக்களஞ்சியம் ஆகியவை அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை யாழ். கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கத்திற்குச் சுட்டிக்காட்டியிருந்தது.

உதவி ஆணையாளர் திரு க. பரமலிங்கம் தமது வரவு செலவு நிதியிலிருந்து மேற்படி கூட்டங்களை அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

கட்டட நிர்மாண வேலைகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (உ-161)

## தபால் விநியோகம் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
வடபகுதிக்கான தபால் விநியோகங்களும்போக்குவரத்துக்களும் கடந்த ஒருவார காலமாக மீண்டும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.

கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட தபால் பொதிகளும் கடிதங்களும் வவுனியாவில் தேங்கிக் கிடப்பதே இதற்குக் காரணமாகும்.

கிளிநொச்சியில் கடந்த ஒருவாரமாக நடைபெற்றுவரும் மோதல்கள் காரணமாகவே இந்த ஸ்தம்பித நிலை ஏற்பட்டுள்ளது. (இ-10)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, ... உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 10-06-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., ... Second Lane, Power House Road, Jaffna. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number Q J 60 N 8y

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org